TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

ஜூலை 2026

தீபம் 15 சுடர் 02

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

## இளைஞர் இதயங்களை உடனிருந்து வழி நடத்தும் ஆசிரியர்



## தீபகத்திலிருந்து **இறையாசீர்**

அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,



# இளைஞர் இதயங்களை உடனிருந்து வழிநடத்தும் **ஆசிரியர்**

அன்பிற்கினிய ஆசிரியர் பெருமக்களே,

புதிய கல்வியாண்டின் துவக்கத்தில் உங்களுக்கெல்லாம் என் அன்பான வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்!

பள்ளிகள் திறக்கப்படுவது வெறும் வகுப்புகள் தொடங்குவது அல்ல் அது சந்திப்பு, உடனிருப்பு, வழிநடத்தல் மற்றும் மாற்றத்தின் புனிதப் பயணத்தின் தொடக்கமாகும். தொன் போஸ்கோ தனது பணியை ஒரு கட்டிடத்தோடும் திட்டத்தோடும் தொடங்கவில்லை. அவர் ஒரு சிறுவனான பார்த்தலோமேயு கரெல்லியுடன் நிகழ்ந்த ஒரு எளிய சந்திப்பிலிருந்தே தனது பணியை ஆரம்பித்தார். அந்தச் சந்திப்பு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான இளைஞர்களை மாற்றிய கல்வி இயக்கமாக வளர்ந்தது. இது நமக்கு ஒரு முக்கியமான உண்மையை நினைவூட்டுகிறது: கல்வி என்பது உறவிலிருந்து தொடங்குகிறது. பாடங்களை கற்பிப்பதற்கு முன் நாம் இதயங்களைத் தொட வேண்டும்.

நமது வகுப்பறைக்குள் வரும் ஒவ்வொரு மாணவரும் தனித்துவமான ஒரு கதையுடன் வருகிறார். சிலர் தன்னம்பிக்கையுடன் வருகிறார்கள் சிலர் பயத்துடன் வருகிறார்கள். சிலர் கனவுகளோடு வருகிறார்கள் சிலர் உள்ளார்ந்த

காயங்களோடு வருகிறார்கள். சலேசிய சபையின் கல்வியாளர்களாகிய நாம் அவர்களை அன்புடன் வரவேற்கவும், பொறுமையுடன் கேட்கவும், வளர்ச்சிக்குச் சவால் விடுக்கவும், அவர்களின் முழு ஆற்றலையும் வெளிப்படுத்த உடனிருந்து வழிநடத்தவும் அழைக்கப்படுகிறோம். இன்றைய இளைஞர்களுக்கு ஆசிரியர்கள் மட்டுமல்ல, வழிகாட்டிகளும் தேவை. அவர்கள் தங்களை நம்ப முடியாத நேரங்களிலும் அவர்களை நம்பும் பெரியவர்கள் தேவை. ஒரு ஊக்கமூட்டும் புன்னகை, ஒரு பாராட்டு, ஒரு அன்பான செவிமடுத்தல் அல்லது தனிப்பட்ட கவனம் : இவை அனைத்தும் ஒரு குழந்தையின் வாழ்க்கையை மாற்றக்கூடிய அனுபவங்களாக மாறலாம்.

கல்வியின் இலக்கு கல்விசார் வெற்றி மட்டுமல்ல. நல்ல கிறிஸ்தவர்களையும் பொறுப்பான குடிமக்களையும் உருவாக்குவதே நமது பணியாகும். நாம் அறிவை மட்டுமல்ல, இதயத்தையும், மனச்சாட்சியையும், ஆன்மாவையும் உருவாக்குகிறோம். மாணவர்கள் தங்கள் திறமைகளை கண்டறியவும், நல்ல முடிவுகளை எடுக்கவும், நல்ல குணநலன்களை வளர்க்கவும், அன்றாட வாழ்க்கையில் இறைவனை அனுபவிக்கவும் உதவுகிறோம். தீபகம் தனது கல்வியாளர்களுக்கு நம்பிக்கை வளர்ப்பு, விழுமியக் கல்வி, உடனிருப்பு பயிற்சிகள் மற்றும் புதுமையான வளங்கள் மூலம் தொடர்ந்து துணை நிற்க உறுதியளிக்கிறது. ஒவ்வொரு மாணவரும் அன்பு, ஏற்றுக்கொள்ளல், வழிகாட்டுதல் மற்றும் ஊக்கத்தை அனுபவிக்கும் கல்விச் சூழலை நாம் இணைந்து உருவாக்குவோம்.

இந்த புதிய கல்வியாண்டில், தந்தையின் இதயம் கொண்ட ஆசிரியராகவும், ஆசிரியரின் பொறுமை கொண்ட வழிகாட்டியாகவும், புனிதரின் நம்பிக்கை கொண்ட கல்வியாளராகவும் விளங்கிய தொன் போஸ்கோவைப் பின்பற்றுவோம். இறைவன் உங்கள் கல்விப் பணியை ஆசீர்வதிப்பாராக. கிறிஸ்தவர்களின் துணையான அன்னை மரியாள் உங்களுடன் நடப்பாராக.

**ஒவ்வொரு வகுப்பறையும் ஒளி, நம்பிக்கை, மாற்றம் அனுபவிக்கப்படும் இடமாக மாறட்டும்!**

என்றும் அன்புடன்

*அருட்பணி.* **ஜேசுதாஸ்** *ச.ச*

*இயக்குநர் - தீபகம்*

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 03.07.2026 | புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா- திருப்பலி | 06 |
| 04.07.2026 | போர்த்துக்கல் நாட்டு புனித எலிசபெத் - திருப்பலி | 07 |
| 05.07.2026 | பொதுக்காலம் 14வது ஞாயிறு -திருப்பலி | 08 |
| 06.07.2026 | புனித மரிய கொரற்றி - திருப்பலி | 09 |
| 07.07.2026 | அருளாளர் மரிய ரொமேரோ மெனேசிஸ் - திருப்பலி | 11 |
| 11.07.2026 | புனித பெனடிக்ட் - திருப்பலி | 12 |
| 12.07.2026 | பொதுக்காலம் 15வது ஞாயிறு - திருப்பலி | 13 |
| 13.07.2026 | புனித ஹென்றி - திருப்பலி | 15 |
| 15.07.2026 | புனித பொனவெந்தூர் ஆயர் - திருப்பலி | 16 |
| 16.07.2026 | கார்மேல் மலை புனித கன்னி மரியா - திருப்பலி | 17 |
| 19.07.2026 | பொதுக்காலம் 15வது ஞாயிறு - திருப்பலி | 18 |
| 22.07.2026 | புனித மகதலா மரியா விழா - திருப்பலி | 20 |
| 23.07.2026 | புனித பிரிட்ஜித் - திருப்பலி | 21 |
| 24.07.2026 | புனித ஷார்பல் மாக்லூப் -திருப்பலி | 23 |
| 25.07.2026 | புனித யாக்கோபு திருத்தூதர் விழா -திருப்பலி | 24 |
| 26.07.2026 | பொதுக்காலம் 17வது ஞாயிறு -திருப்பலி | 25 |
| 28.07.2026 | புனித அல்போன்சா முட்டாத்துப்படத்து கன்னி -திருப்பலி | 27 |
| 29.07.2026 | புனிதர்கள் மார்த்தா, மரியா, இலாசர் -திருப்பலி | 28 |
| 31.07.2026 | லொயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார் - திருப்பலி | 29 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| சென்னை சலேசிய மாநிலமும் புனித தோமையாரும் | 32 |
| அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் வாழ்வு தரும் பாடம் | 35 |
| புனித லொயோலா இஞ்ஞாசியார் வாழ்வு தரும் பாடம் | 38 |
| திருஅவைச் செய்திகள் | 41 |
| சிந்திக்க ஒரு பக்கம் : வாழ்ந்து காட்டுங்கள் | 44 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா

திருப்பலி
03.07.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவின் இனிய குலமே, இன்றைய தினம் நம் திருஅவை இயேசுவின் பன்னிரெண்டு திருத்தூதர்களில் ஒருவரான புனித தோமையாரை (செயின்ட் தாமஸ்) சிறப்பிக்க நம்மை அழைத்திருக்கிறது. கலிலேயாவைச் சேர்ந்த இவர், இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு சந்தேகப்படும் தோமா என்று அறியப்பட்டாலும், இயேசுவின் விலா காயங்களில் தன் விரலைவிட்டு தொட்டுப்பார்த்து "என் ஆண்டவரே என் கடவுளே" என்று முதன்முதலில் இயேசுவை கடவுளாக ஏற்றுக்கொண்டவர். வரலாற்றின்படி கி.பி. 52ம் ஆண்டில் இந்தியாவிற்கு அதாவது கேரளாவிலுள்ள முசிறி என்ற துறைமுகத்தை அடைந்து, அங்கு பல பேருக்கு திருமுழுக்குக் கொடுத்து, புனித தோமா கிறிஸ்தவர்கள் என்ற சமூகத்தினரை உருவாக்கினார். அங்கு அவர் பரங்கிமலை சென்றபோது பகைவர்களால் ஈட்டியால் குத்தப்பட்டு உயிர்தியாகம் செய்தார்.

புனித தோமையார் கலிலேயாவில் பிறந்தவர். இவரின் தந்தை படகுகட்டும் தொழில் செய்து வந்தார் எனவும், தோமாவும் அதே தொழிலையே செய்து வந்ததாக மரபுகள் கூறுகின்றன. தோமாவின் பணிகள் என்ற நூல், "ரப்பான்" பாட்டு என்ற வாய்மொழி பாடல் தொகுப்பு ஆகியவை புனித தோமா இந்தியாவில் வாழ்ந்தது குறித்த சான்றுகளை வழங்குகின்றன. 21-12ல் கி.பி. 72ல் சென்னையில் இறந்ததாக கூறப்படுகிறது. கட்டட கலைஞர்களுக்கு பாதுகாவலராக புனித தோமா கருதப்படுகிறார். இவரது உடலின் எச்சங்கள் தற்போது இத்தாலியின் "ஓர்டோனா" என்னம் நகரில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இயேசுவின் சீடராக இருந்த புனித தோமாவின் இந்திய வருகை நம் இந்தியாவிற்கே பெருமை சேர்ப்பதாகவும் கருதப்படுகிறது. இப்பெருமையில் நாமும் பங்கேற்று இயேசுவின் சீடர்களாக வாழ இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. முடிவில்லா வாழ்வின் ஒளியே எம் இறைவா, உமது திருப்பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் மற்றும் இருபால் துறவறத்தார் பொதுநிலையினர் அனைவரும் உம் சீடரைப்போன்று தங்களின் வாழ்விலும் பலவிதமான வழிகளில் உமது திருஅவையை உலகமெங்கும் சென்று நற்செய்தியைப் பறைச்சாற்ற அவர்களுக்குத் தேவையான அனைத்து ஆற்றலையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஐயம் தீர்த்து தெளிவும் உறுதியும் தரும் இறைவா, நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள் என்று ஐயம் தீர்ந்து உரைத்த புனித தோமையாரைப்போல

நாங்களும் உம்மை மனதார ஏற்று முழுமை நிறைந்த நம்பிக்கையோடு அனைத்து மக்களும் உம்மில் நிலைத்து வாழவும் நற்செய்தியில் நம்பிக்கையுடன் செயல்பட்டு சாட்சிய வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. அமைதியின் அரசரே எம் இறைவா, பலதரப்பட்ட சந்தேகங்களினால் பிரிந்து வாழும் தம்பதியினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். "இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக" என்ற வார்த்தைக்கு மதிப்பளித்து, ஒருவரையொருவர் புரிந்துக்கொண்டு, உண்மையான அன்போடு நிறைகுறைகளை ஏற்றுக்கொண்டு திருஅவையை கட்டியெழுப்ப தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

# போர்த்துக்கல் நாட்டு புனித எலிசபெத்

திருப்பலி
04.07.2026

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

அன்பு இறைமக்களே, இன்று அன்னை திருச்சபையானது, சமாதானத்தின் தூதரும், ஏழைகளின் அடைக்கலமுமாகிய போர்த்துக்கல் நாட்டு புனித எலிசபெத் அவர்களின் நினைவுத் திருநாளைக் கொண்டாடுகின்றது.

போர்ச்சுகலின் புனித எலிசபெத் 1271-ஆம் ஆண்டு ஸ்பெயினில் பிறந்த ஒரு இளவரசி ஆவார். தனது 12-வது வயதில் போர்ச்சுகல் மன்னர் டெனிஸை மணந்து, போர்ச்சுகலின் ராணியானார். மன்னரின் முறையற்ற வாழ்க்கை மற்றும் குடும்பப் பூசல்களுக்கு இடையே, எலிசபெத் தனது பொறுமையாலும் அன்பாலும் பல குடும்ப மற்றும் அரசியல் சண்டைகளைத் தீர்த்து வைத்தார். இதனால் அவர் "சமாதானத்தை உருவாக்குபவர்" என்று அழைக்கப்பட்டார். ஏழைகள், நோயாளிகள் மற்றும் கைவிடப்பட்டவர்களிடம் மிகுந்த அன்பு காட்டி அவர்களுக்கு உதவினார். ஜூலை 4, 1336-ல் எஸ்ட்ரெமோஸ் நகரில் காலமானார். 1625-ஆம் ஆண்டில் கத்தோலிக்க திருஅவையால் புனிதராக அறிவிக்கப்பட்டார். அரச குடும்பத்தில் பிறந்தும், உலக மாயைகளில் பற்றுக் கொள்ளாமல், இறைவனின் அன்பிலும் பிறரன்பிலும் திளைத்தவர் இவர். குடும்பத்தில் அமைதியை நிலைநாட்டவும், சண்டை சச்சரவுகளைத் தீர்க்கவும் தன் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். இப்புனிதரின் வழியைப் பின்பற்றி, நம் இல்லங்களிலும் சமூகத்திலும் அமைதியை உருவாக்கவும், ஏழைகளுக்கு உதவவும் இத்திருப்பலியில் அருள் வேண்டுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அமைதியின் நாயகனே இறைவா, போர்த்துக்கல் நாட்டு புனித எலிசபெத் வழியாக நீர் அளித்த சமாதானத்தின் வரிக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், மற்றும் குருக்கள்

அனைவரையும் உமது தூய ஆவியால் நிரப்பி, அவர்கள் வழியாக உலகில் அமைதியும் நீதியும் தழைத்தோங்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் இறைவா, உலகெங்கும் போர், பகை, மற்றும் கருத்து வேறுபாடுகளால் அவதிப்படும் மக்களுக்கு அமைதியைத் தந்தருளும். புனித எலிசபெத் போரிடும் நாடுகளுக்கு இடையே சமாதானத்தை ஏற்படுத்தியது போல, தலைவர்கள் அனைவரும் பேச்சுவார்த்தை மூலம் சச்சரவுகளைத் தீர்த்து, மனிதநேயத்தை நிலைநாட்ட உமது ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் ஊற்றே இறைவா, புனித எலிசபெத் பஞ்சம் மற்றும் வறுமைக் காலத்தில் ஏழைகளுக்கு உணவளித்துக் காத்தவர். எங்கள் சமூகத்தில் பொருளாதார நெருக்கடியால் வாடுபவர்களுக்கும், வீடற்றவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் தேவையான உதவிகள் கிடைக்கச் செய்தருளும். நாங்களும் எங்கள் உடமைகளைப் பகிர்ந்துகொள்ளும் நல்ல உள்ளத்தைப் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 14வது ஞாயிறு

திருப்பலி
05.07.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *செக். 9: 9-10* II. *உரோ. 8: 9,11-13* *மத். 11: 25-30*

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் எல்லோரும் வாருங்கள் என்று அழைக்கும் இயேசுவின் கரங்களுக்குள் திருஅவை பொதுக்காலம் பதினான்காம் ஞாயிறு திருப்பலிக்கு அன்புடன் அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் "நீதியுள்ளவர் வெற்றிவேந்தரின் வருகையால் மகிழ்ந்துக் களிக்கூறு" என்று வரவிருக்கும் இறைமகனைப்பற்றி செக்கரியா இறைவாக்கினர் எடுத்துரைக்கின்றார். எளிமையுள்ளவராய் கழுதைக் குட்டியின்மேல் ஏறிவரும் இறைமகனின் வருகையைப் பற்றியே எடுத்துரைக்கிறார். நாமும் இறைமகன் இயேசுவின் வருகையை எதிர்க்கொண்டு வரவேற்க தயாராவோம். இரண்டாம் வாசகத்தில் உண்மைக்கிறிஸ்தவர்களாக வாழ்ந்து ஆண்டவரின் பேரின்ப வாழ்வில் நிலைத்து நிற்க ஆவியின் ஆற்றல் ஒவ்வொருவரிலும் குடிக்கொள்ள வேண்டுமென்றும், தூய ஆவியின் துணையில்லாமல் மனிதன் பாவ சூழ்நிலைகளை வெறுத்து ஒதுக்கி வாழ முடியாது என்று புனித பவுல் தெளிவுப்படுத்தினார்.

நற்செய்தியில் "நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்" என்று இயேசு நம்மை நோக்கி அன்பு வார்த்தைகளை உதிர்க்கிறார். பெருமையும், பொறாமையும் போட்டியிட்டு வளர்ந்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் கனிவும், மனத்தாழ்ச்சியும் நமக்குள் பிறந்தால் தரணியே புத்துயிர் பெறும்.

இறைஇயேசுவின் வார்த்தையைக் கேட்டவர்களாக மட்டுமல்லாமல் அவற்றின் வடிவங்களை உருவாக்கி வளமாக்குவோம். பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருக்கும் நமக்கு நம் சுமையை எளிதாக்கி இயேசு நம்மை அழைக்கிறார். இவ்வுலகில் வாழும் நம் ஒவ்வொருவருக்கும் சுமை என்பது பலவகைகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த உலகில் பிறப்பெடுக்கும் ஒவ்வொரு உயிரும் தம் சுமை அனைத்தையும் நான் தாங்கிக் கொள்வேன் என்று நம் வாழ்வில் நம்பிக்கையைத் தருகிறார். நாம் பிறரோடு அன்பையும் பிறர் சுமைகளையும் பகிர்ந்து பண்பட்ட வாழ்வை மேற்கொள்ள இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. கனிவும் எளிமையும் உடைய ஆண்டவரே, உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் இயேசுவின் அமைதியையும் கனிவையும் உலகிற்குப் பறைச்சாற்றும் சாட்சிகளாக வாழ அவர்களுக்கு தூய ஆவியின் ஞானத்தை அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் அரசராகிய ஆண்டவரே, போர், வன்முறை, பிரிவினை, கலாச்சார சீரழிவு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் நாடுகள், இனக்குழுக்கள் அனைத்திலும் அமைதி நிலைநாட்டப்படவும், பகைமை உணர்வுகள் நீங்கி, மக்கள் அனைவரும் நீர் அளிக்கும் அமைதி நிறைந்த வாழ்வை வாழ்ந்துக்காட்ட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. என் நுகம் அழுத்தாது என்றவரே எம் இறைவா, எம் நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், கல்வி ஒழுக்கம், தெய்வபயம் கொண்டு வாழவும் மூத்தோர் சொல் கேட்டு நடக்கவும், அருள்பொழிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள் என்றவரே, கடன் சுமையால் அவதியுறும் எண்ணற்ற குடும்பங்களின் கடன் பாரத்தை போக்கி அவர்களை சாவிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனித மரிய கொரற்றி

திருப்பலி
06.07.2026

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

இறையேசுவில் அன்பு மக்களே, இன்று நம் தாய் திருஅவை தூய மரியகொரற்றி என்னும் புனித கன்னிகையை நினைவுக்கூர்ந்து அவளின் வாழ்வை நாம் பிரதிபலிக்க நம்மை அழைக்கிறது. முதலாவது தூய மரிய

கொரற்றி தனது கன்னிமையை தூய்மையாய் காக்கும்படி அன்னை மரியாளிடம் தன்னையே அர்ப்பணித்திருந்தாள். இரண்டாவதாக கடவுள் விரும்பாததை அவள் செய்ய துணியவில்லை. கடவுள் விரும்பாததை செய்யக்கூடாது என்பதற்காக உயிரை இழக்கும்வரை போராடினாள்.

என் அன்பு சகோதரிகளே, நாம் நமது ஆன்மாவிலும், உடலிலும் நமது தூய்மையைக் காத்துக்கொள்ள இறைவிடம் செபிக்கிறோமா? நமது நடை, உடை, பாவனை, நமது சுயமரியாதையைக் காத்து மேம்படுத்தும் விதமாய் உள்ளதா? அதை நமது பெண் பிள்ளைகளுக்கு பயிற்றுவிக்கிறோமா? பெண்களின் சுயமரியாதையை எல்லாவிதத்திலும் மதிக்க நமது ஆண் பிள்ளைகளுக்கு கற்றுத்தருகிறோமா?

இந்தக் கேள்விகளை நமக்கு நாமே கேட்டு தெளிவுப் பெற்று, நமது பிள்ளைகளையும் சீர்ப்படுத்தினால்தான் இப்புனிதையின் திருவிழாவைக் கொண்டாடுவது அர்த்தமுள்ளதாயிருக்கும். இதை உணர்ந்தவர்களாய் இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. சேனைகளின் ஆண்டவரே எம் இறைவா, உமது சேனையான கத்தோலிக்கத் திருஅவையை வழிநடத்தும் குருத்துவத் தலைவர்கள், இருபால் துறவறத்தார் தங்கள் தூய்மையில் உறுதியாய் நிலைத்து வாழ்ந்து கத்தோலிக்க நம்பிக்கையாளர்களையும் அவ்வாறே பயிற்றுவிக்க அவர்களுக்குத் தேவையான வரங்களை புனித மரிய கொரற்றியின் வழியாய் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. "இருமனம் கொண்ட மக்களாகிய அவர்கள் தங்கள் குற்றத்திற்காகத் தண்டனை பெறுவார்கள்" என்று ஓசேயாவின் வழியாய் எச்சரித்த அன்பு ஆண்டவரே, நாங்கள் உம்மோடு ஒருமனதாய் முழுமனதுடன் உமக்கு விருப்பமான நம்பிக்கையுடன் திருமண பந்தத்திலும் பிரமாணிக்கமான தூய்மையுடன் வாழ எங்களுக்கு வரமருள புனித மரிய கொரற்றியின் வழியாய் உம்மை மன்றாடுகிறோம்.

3. பாவத்தில் விழச்செய்யும் உலகுக்கும் அதற்கு காரணமாய் இருப்போருக்கும் கேடு என்று கூறிய இயேசுவே "விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" (மத் 18:7) என்று நாங்கள் உணர்ந்து கொள்ளவும், பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் சிறுவர் சிறுமியரின் உடலிலும், உள்ளத்திலும் ஏற்படும் காயங்கள் புனித மரிய கொரற்றியின் பரிந்துரையால் குணமடைந்து இறையாசீரால் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# அருளாளர் மரிய ரொமேரோ மெனேசிஸ்

திருப்பலி
07.07.2026

## முன்னுரை

*சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்*

மரிய ரொமேரோ மெனோஸஸ் 1902ம் ஆண்டு சனவரி 13ம் நாள் மத்திய அமெரிக்காவில் நிக்கராகுவா நாட்டில் மெர்சேடஸ் நர்ட்பேசா, அன்னா மெனேசிஸ் என்னும் தம்பதியர்களுக்கு அன்புப் புதல்வியாக பிறந்தார். தமது 12ம் வயதில் சலேசிய கன்னியர்கள் நடத்திய பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். "மரியாளின் குழந்தைகள்" (Children of Mary) என்று அழைக்கப்பட்ட இவர், பக்த சபையில் உறுப்பினராகி இயேசுவை அரசராகவும், மரியன்னையை அரசியாகவும் தம் வாழ்வில் ஏற்றுக்கொண்டார். 1919ம் ஆண்டு சான்சால்வதாரில் சலேசிய கன்னியர் சபையில் சேர்ந்தார். புறநகர்ப் பகுதியில் வறுமையில் வாடிய ஏழைகளுக்கும் வீதியில் வாழ்ந்த மக்களுக்கும் ஆசிரியையாகவும், திருத்தூதுவராகவும் விளங்கினார். ஆரட்டரிகளை உருவாக்கி சிறுவர் சிறுமியர் உணவு, உடை மற்றும் கல்வி பெற வசதி செய்தார். "சகாய அன்னையின் கோட்டை" என்ற பெயரில் வீட்டுவசதித் திட்டங்களை உபகாரிகளின் தாராள உதவியுடன் ஏழைகளுக்குச் செய்து கொடுத்தார். நம்பிக்கையில் உறுதியும், பணியில் தெளிவும், வாழ்வில் ஒளிவு மறைவற்ற தன்மையும் பெற்றிருந்தார். ஆசிரியராக, மறைக்கல்வி பயிற்றுவிப்பவராக, கலைஞராக, மருத்துவ தாதியாக, குழந்தைகளுக்கு நல்லதொரு தாயாக, ஏழைகளுக்கு புகலிடமாகவும், அடைக்கலமாகவும் விளங்கிய இவர் இயேசு மரியின் பக்தியை எல்லா இடங்களிலும் பரப்பி 1977ம் ஆண்டு ஜூலை 7ம் நாள் மாரடைப்பின் காரணமாக இயற்கை எய்தினார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 2002ம் ஆண்டு ஏப்ரல் 14ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவர் தான் மத்திய அமெரிக்காவிலே முதல் முறையாக அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர். இவரின் வாழ்க்கை நெறியைப் பின்பற்றி வாழ இத்திருப்பலியில் தொடர்ந்து செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. முழு முதல் தலைவனே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அனைவரும் தங்களின் வாழ்வில் அருட்சகோதரி ரொமேரோ மெனேசிசைப்போல இறைப்பக்தியை எல்லா இடங்களுக்கும், மக்களுக்கும் சென்று சேர்க்க வேண்டிய அருளையும், ஆசீரையும் இவர்களுக்கு அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பின் தலைவனே எம் இறைவா, பகிர்ந்து வாழாத தன்மை ஒரு கொலையே என்ற அருளாளர் மெனேசிசின் வார்த்தைக்கேற்ப, நாங்கள் அனைவரும் எங்களிடம் உள்ளவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து வாழவும், எங்களின் ஆற்றல், சக்தி, திறமைகளை தேவைப்படுவோருக்கு

பயனளிக்கும் விதத்தில் செயல்படுத்த வேண்டிய அருளாசீரை எங்களுக்கு அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, அருளாளர் ரொமேரோவைப் போல நாங்கள் ஒவ்வொருவரும் நம்பிக்கையில் உறுதியும், பணியில் தெளிவும், ஒளிவுமறைவற்ற தன்மையும் பெற்று வாழ்வில் திறம்பட உம் பணியைச் செய்திட தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நன்மைகளின் ஊற்றே இறைவா, எளிய மனத்தோராகிய ஏழை, எளிய மக்களை நாங்கள் அன்பு செய்து, அவர்களின் சிரிப்பில் உம்மைக்காணும் அருளினைத் தந்தருளவும், அவர்களின் கல்வி வளர்ச்சிக்கான முன்னேற்பாடுகளை செய்யக்கூடிய தாராள மனதைத் தந்து ஆசீர்வதித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனித பெனடிக்ட்

திருப்பலி
11.07.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

இறைவார்த்தையே வாழ்வு, வாழ்வே இறைவார்த்தை என வாழ்ந்தவர்கள் சிலரே. இந்த வரிசையில் வாழ்ந்தவர் புனித பெனடிக்ட் 2தெச. 3:7-12ல் சோம்பித்திரியாமல், பிறருக்கு சுமையாக இல்லாமல் துன்பம் விளைவிக்காமல், உழைத்துதான் உண்ண வேண்டுமென்றும், பிறர் அதுபோல் வாழவும் அறிவுறுத்துகிறது இவ்வார்த்தைகள். இன்றைய வாசகமும், நற்செய்தியும் நமக்குத் தருவது இதுவே. வீணான சடங்குகள், வெளிவேடங்களின்றி, சிறிய செயலானாலும் அது பயனுள்ள செயலாக மாறவேண்டும். இப்படி வாழ்ந்தவர் இப்புனிதர். புனித ஸ்கொலாஸ்திகாவின் சகோதரர் இவர். உயர்ந்த குலத்தில் தோன்றியதால் புகழ்பெற்ற உரோமைக்கு கல்வி கற்க பெற்றோரால் அனுப்பப்பட்டார். அங்கு இளைஞர் மத்தியில் இருந்த தீச்செயல்கள் இவரை பதைபதைக்கச் செய்து, உரோமை விட்டு வெளியேறினார்.

மறைநூலில் பாவச் செயலைக் கண்டால் பாம்பைக் கண்டதுபோல எனும் இவரது முயற்சி எல்லோருக்கும் நல்ல பாடம். இறைவனுக்கு தன்னை அர்ப்பணிக்க திட்டமிட்டு மலை உச்சிக்குச் சென்று எர்மானூசு என்ற தவமுனிவரை சந்தித்து அவர் காட்டிய வழியில் தவவாழ்க்கை மேற்கொண்டு மக்கள் பலரை தன்பால் ஈர்த்தவர். இதன் விளைவாக தோன்றியதே "பெனடிக்ட் துறவற சபை" கி.பி. 1964ல் திருத்தந்தை 6ம் சின்னப்பர் இவரை ஐரோப்பிய நாடுகளின் சிறப்பு பாதுகாவலர் என அறிவித்தார். இவர் எழுதிய துறவற வாழ்வின் ஒழுங்குநூல் உறுதுணையாக இருந்ததுபோல வேறு எந்த நூலும் அந்நாளில் அமையவில்லை. அதனால் 12ம் பத்திநாதர் இவருக்கு ஐரோப்பாவின் தந்தை என்ற பட்டம் சூட்டினார். தனிமையை நாடினாலும் அடிக்கடி மக்களைச் சந்தித்தார். தனது இறப்பை முன்னறிவித்தார். திருவுணவு

பெற்று தனது கைகளை உயர்த்தி செபித்துக் கொண்டிருக்கும் போதே உயிர் பிரிந்தது. இவரைப்போன்று செபத்திலும் பக்தியிலும் சிறந்து வாழ இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் அனைத்திலும் ஞானத்தோடு நடந்துக்கொள்ளவும், கிறிஸ்துவோடு மாறாத நட்பும், எவராலும் பிரிக்கமுடியாத அன்பும், கூட்டு வாழ்வும் வாழ அழைக்கப்பட்ட எம் ஞான மேய்ப்பர்கள் அவ்வாறு வாழவும், பிறரையும் வாழ தூண்டவும் வேண்டிய அருளைத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழும் வழிகளை எமக்குத் தந்த இறைவா, திருஅவையின் உண்மையான கட்டளைகள் என்ன என்பதை உணர்ந்து அதை சிரமேற்கொண்டு வாழ்ந்து எமது வாழ்வால் பிறரையும் மாற்றி, உமக்கேற்ற வழியில் அவர்களையும் வழிநடத்தத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. புனிதமே உருவான எம் இறைவா, இன்று நினைவுகூறும் புனிதரைப்போல இறை மக்களாகிய நாங்கள் வாழவும், எங்கள் பிள்ளைகளும், தலைமுறைகளும் உம்மைப்பின்பற்றி வாழவும் வேண்டுகிறோம். இப்புனிதரைப்போல மற்ற அனைத்து புனிதர்கள் வாழ்வையும் நாங்கள் தினம் தினம் எங்கள் வாழ்வில் நினைத்துப் பார்த்து, தியானித்து அதன்படி வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 15வது ஞாயிறு

திருப்பலி
12.07.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *எசா. 55:10-11*   II. *உரோ.8:18-23*   *மத். 13:1-23*

இறைச்சமூகத்தின் தூண்களாய் வாழும் இறைக்குலமே, மனிதனோடு மிக நெருங்கிய தொடர்பைக் கொண்ட விவசாயத்தை உவமையாகக் கொண்டு இயேசு கிறிஸ்து விண்ணரசைப் பற்றி மனிதர்களுக்கு விளக்குவதாக இன்றைய நற்செய்தி வாசகம் அமைந்துள்ளது. விவசாயி விதையை தான் பயன்படுத்திய நிலத்தில் விதைத்து அதிலிருந்து முழுமையான பலனை எதிர்ப்பார்ப்பர். அதைப்போன்று இறைவார்த்தையை இதயத்தில் விதைத்து, ஆன்மீகப் பலனை அறுவடைச் செய்ய இறைவன் எதிர்ப்பார்க்கிறார். கடவுளுடைய வார்த்தை நம் உள்ளத்தில் பலன் தரவேண்டுமென்றால் நம் இதயம் நல்ல நிலமாக தரமானதாக இருக்க வேண்டும். இன்றைய வாசகத்தில் மனிதர்களின் உள்ளத்தை நல்ல நிலங்களோடு ஒப்பிட்டு அவர்கள்

இறைவார்த்தையை எடுத்துரைக்கும் நல்முத்துக்களாக திகழலாம் என்பதை விளக்குகிறது. எவ்வகையான தடைகள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் தகர்த்தெரிந்து நற்செய்தி அறிவிப்பதே என் கடமை என்பதை உணர்ந்து செயல்படவேண்டும். வானத்திலிருந்து வரும் மழையானது, இனம், குலம், மதம், தரம் என்று எதையும் பாராமல் அனைவருக்குமாய் மழை பொய்கிறது. இதனால் விவசாயிகளின் வளம் பெறுகவும், மக்களின் வாழ்வாதாரம் செழிக்கவும் வழி செய்கிறது.

இறைவனால் படைக்கப்பட்டு அவருடைய மக்களாய் வாழும் நாம் இறைவார்த்தையை நாள்தோறும் பெறும் நாம், அவ்வார்த்தையை ஆழ்மனதில் நிறுத்தி தியானத்து அதன்படி வாழவேண்டும். இறைவார்த்தையை கேட்டால் மட்டும் நல்ல கிறிஸ்தவர்களாக மாற்றிவிடாது, இறைவார்த்தையை கேட்டு, அதை மனம்  நொறுங்குண்ட தாழ்மையான இதயத்தோடு உள்ளவர்களுக்கு ஆறுதலிக்கும் இறைவார்த்தையை அளித்து உண்மையான கிறிஸ்தவர்களாக வாழ நாம் இறைவனால் உருக்காக்கப்பட்டுள்ளோம். நாமும் நம் இதயத்தில் சூழ்ந்துள்ள பகைமை, பொறாமை, வெறுப்பு, மற்றும் காழ்ப்புணர்ச்சி போன்ற முட்களைகளைக் களைந்து இறைவார்த்தையை ஏற்று அதன்படி வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இறைவார்த்தை என்னும் விதையை உலகமெங்கும் விதைக்க, நீர் தேர்ந்தெடுத்து உம்மால் எங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் உமது கரங்களில் ஒப்புவிக்கின்றோம். இவர்கள் இறைவார்த்தையை விதைப்பவர்களாக மட்டும் இருந்துவிடாமல் அந்த வார்த்தையின்படி வாழ்ந்து இறையரசைக் கட்டியெழுப்ப தேவையான அருளையும், ஆசீரையும், நல்ல உடல்உள்ள நலனையும் அளித்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இயற்கையின் ஊற்றே எம் இறைவா, உலகில் உழவுத்தொழிலையும் அதைச் சார்ந்தவர்களையும் உமக்கு ஒப்புக் கொடுக்கின்றோம். விவசாயம் செழிக்க தேவையான மழையும் இயற்கை சூழலும் அமைந்திடவும், விவசாயிகளின் வாழ்வாதாரம் என்றும் செழிப்புற்று விளங்கவும், பணத்திற்காக மனிதர்களுக்கு ஊருவிளைவிக்கும் பூச்சுக்கொல்லி மருந்துகள் உரங்களைப் பயன்படுத்தி மனிதர்களுக்கு இன்னல்களை விளைவிக்காமல் விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பு அவர்கள்தான் உயிர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பவர்கள் இவர்களுக்குப் போதுமான நல்ல உடல்உள்ள திடமளித்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3 அன்பின் ஊற்றானவரே, நாட்டையாளும் தலைவர்கள் மக்களின் தேவைக்காக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைவில்

கொண்டு மக்களின் குறைகளைக் களைந்து, தேவைகளை நிறைவேற்றி மக்களை தங்களின் குடும்பமாக பாவித்து நல்வழி நடத்தத் தேவையான ஆற்றலையும், சக்தியையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வார்த்தை மனுவுருவான இறைவா, நாங்கள் இறைவார்த்தைகளை வெறுமனே கேட்பவர்களாக மட்டுமல்லாமல், எங்களை நாங்கள் ஏமாற்றிக்கொள்ளாமல், நல்ல நிலத்தில் விழுந்த விதைப் பலனளிப்பதுபோல நாங்களும் இறைவார்த்தையை எங்கள் உள்ளங்களில் முழுமையாக ஏற்று அதன்படி வாழ்ந்து மற்றவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் நற்கருவிகளாக நாங்கள் வாழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

# புனித ஹென்றி

திருப்பலி
13.07.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையானது புனித ஹென்றியின் திருவிழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கிறது. ஜெர்மனியில் உள்ள பவேரியாவில் 973, மே 6 அன்று பிறந்தார். பவேரியாவின் கோமகனாக இருந்த இவருடைய தந்தையின் பெயர் இரண்டாம் ஹென்றி. ஜிசெல்லா என்பது இவரது தாயாரின் பெயர், ரீகன்பெர்க் ஆயர் வோல்/ப்காஸ் என்பவரின் பொறுப்பில் வளர்ந்த இந்த புனிதர் அவரது வழிகாட்டுதலில் கல்வி பயின்றார். குருத்துவ வாழ்வு வாழ விரும்பினார். திடீரென தந்தை இறந்ததால் தந்தையின் பதவிக்கு இவரை 995ல் தேர்ந்தெடுத்தார்கள். பவேரியா நகரின் கோமகனாக இருந்த ஹென்றி 1002ம் ஆண்டு ஜெர்மனியின் அரசரானார். குணகுந்தா என்ற பெண்மனியை தமது வாழ்க்கைத் துணையாக்கிய ஹென்றிக்கு குழந்தைகள் பிறக்காவிட்டாலும், மனமகிழ்வுடன் குடும்பம் நடத்தி சிறப்புடன் ஆட்சி செய்து வந்தார்.

திருத்தந்தை எட்டாம் ஆசீர்வாதப்பர் 1014 பிப்ரவரி 14 அன்று ஹென்றியை உரோமையின் பேரரசராக முடிசூட்டினார். தன் ஆட்சிகாலத்தில் கிறிஸ்தவ மதத்தைக்காக்க இத்தாலியில் கிரேக்கர்களுடனும், லொம்பார்டுகளுடனும் போராடினார். திருஅவைக்கும் அரசுக்கும் இடையே நல்லுறவை வளர்த்தார். மனைவியை இழந்த பிறகு சிலகாலம் தனிமையில் வாடினார். கடைசி காலங்களில் சிறிது ஊனமுற்ற காலுடன் இறைவனின் அன்புப் பிள்ளையாக வாழ்ந்து 1024, ஜூலை 13 அன்று இறைவனைப்பற்றிக் கொண்டார். இவரைத் திருத்தந்தை 3ம் யூஜின் 1146ல் புனிதராக உயர்த்தினார். இந்தப்புனிதர் மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுகிறார். இறைவனின் ஆசீர் இந்த புனிதரின் வழியாக நம்மை வழிநடத்த தொடர்ந்து இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களது பணிவாழ்வில் விவேகத்தோடு செயல்படவும், இவர்களுக்குத் தேவையான துணிவையும், அமைதியையும் அணிகலன்களாகக் கொண்டு செயல்படுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. உறவை வளர்க்கும் உன்னத இறைவா, எம் நாட்டையாளும் தலைவர்கள் தூய ஹென்றியைப்போல தங்களின் பணியின் மேன்மையை உணர்ந்தவர்களாய், ஏழை எளிய மக்களுக்குத் தங்களால் முடிந்தளவு அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் எண்ணத்தையும், மனநிலையையும் அவர்களுக்கு அளித்து ஏழைகளின் வாழ்வில் மகிழ்வினைக் கண்டிட தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. துணை நிற்கும் தூய தந்தையே, மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலரான தூய ஹென்றியின் திருநாளைக் கொண்டாடும் நாங்கள், எங்கள் அன்பியக் குடும்பங்கள் மற்றும் பங்குத்தளங்களில் இருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய சலுகைகளை பெற்றுத்தரும் கருவிகளாக செயல்பட எங்களை ஆசீர்வதித்து நல்வழி நடத்திட வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

# புனித பொனவெந்தூர் ஆயர்

திருப்பலி
15.07.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையன்பில் வாழும் இனிய நெஞ்சங்களே, இன்றைய தினம் நாம் புனித பொனவெந்தூர் என்னும் புனிதரை நினைவு கூறுவோம். ஜான் என்பது இவரது திருமுழுக்குப் பெயர். இளம் வயதில் இவர் நோய்வாய்ப்பட்டபொழுது புனித பிரான்சிஸ் அசிசியார் இவரை புதுமையாக சுகப்படுத்தினார்.

தூய பொனவெந்தூர் தனது 22ம் வயதில் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து புனித தாமஸ் அக்குவினாசை நண்பராக பெற்று கல்வி பயின்றார். பின்னர் சபையின் தலைவராகி சபையில் அமைதியை ஏற்படுத்தினார். புனித அசிசியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியபோது புனித தாமஸ் அக்குயினாஸ் "ஒரு புனிதர் மற்றொரு புனிதரின் வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறார்" என்று கூறி பெருமிதப்பட்டார். திருத்தந்தை இவரது திறமையை கண்டு இவரை கர்தினாலாக்க தீர்மானித்து அதற்குரிய தொப்பியை தனது பிரதிநிதிகள் மூலமாக புனித பொனவெந்தூரிடம் அனுப்பினார். அவர்கள் அங்கு சென்றபோது சமையறையில் தட்டுகளை கழுவிக்கொண்டிருந்த புனித பொனவெந்தூரை கண்டு திகைத்து விட்டனர்.

புனிதர் அவர்களிடம் "தொப்பியை தயவு செய்து அந்த மரத்தில் தொங்க விட்டு செல்லுங்கள்" என்று கூறினார் நமது தாழ்ச்சி நிறைந்த புனிதர். (புனிதர்களின் வரலாறு)

தன்னையே இழக்க துணிந்தவன் உண்மையான சீடன். வாழ்வில் துன்பங்கள் நேரும்போது தளரா மனதுடன் இறைவனைப்பற்றிக் கொண்டு எதையும் தாங்கும் இதயத்துடன் வாழவேண்டும் என்றும், சீடத்துவம் என்பது எதையும் முழு நிறைவுடன் செய்வதுதான் என்று கூறும் நமது புனிதரின் நினைவுடன் இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனாம் இறைவா, உமது வழித்தோன்றல்களாகிய திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், இருபால் துறவியர், குருக்கள், பொதுநிலையினர் அனைவரையும் ஆசிர்வதித்தருளும். ஆவியின் கொடைகளை பெற்றுள்ள இவர்கள் வளரும் சமுதாயத்தினரை இறைவாக்கு பணியாளர்களாக தொண்டாற்றும் உள்ளம் கொண்டவர்களாக, கற்றுக்கொடுப்பவர்களாக, ஊக்கமூட்டுபவர்களாக, தலைமை பொறுப்பேற்று செயல்படும் தலைவர்களாக உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பளிக்கும் இறைவா, உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்க இறைமக்களுக்கு மற்ற மதவாதிகளால் எந்தவித தீங்கும் உயிர் ஆபத்தும் ஏற்படாவண்ணம் பாதுகாத்து, மதநல்லிணக்கமும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்பை வளர்க்கவும், ஒற்றுமை உணர்வு அனைவர் மனதிலும் உருவாக வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் அரசே, இக்கால இளைய சமுதாயத்தினரை உம்கரம் ஒப்புவிக்கிறோம். வங்கிகளில் கடன்வாங்கி படித்தும் வேலைவாய்ப்பு கிடைக்காமல் சோர்ந்து, வாழ வழித்தெரியாமல் தவறான வழிகளில் வாழ்வைத் தொலைத்துவிட்டு தவித்துக் கொண்டிருக்கும் இளம் சமுதாயம் மீட்புப்பெற்று வாழவும், அவர் தங்களின் துன்பங்களை துடைக்க நீர் ஒருவரே என்பதை உணர்ந்து உம்வழியில் நாளும் நடந்திட வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.



# கார்மேல் மலை புனித கன்னி மரியா

திருப்பலி
16.07.2026

## முன்னுரை

*திரு. விக்டர்*

இறை இயேசுவின் அன்பு சகோதர சகோதரிகளே, இன்று நம் தாய் திருஅவையானது தூய கார்மேல் அன்னையின் திருநாளைக்கொண்டாட அழைப்பு விடுக்கிறது. கார்மேல் சபையின் தலைமை தந்தையாக இருந்த தூய சைமன் ஸ்டோக் என்பவருக்கு அன்னை மரியாள் 1251ம் ஆண்டு ஜூலை 16

அன்று தோன்றி அவரிடம் உத்திரியம் ஒன்றைக் கொடுத்து, "இதை பக்தியோடு அணிபவர்கள் இவ்வுலக வாழ்விலும், மறுவுலக வாழ்விலும் எவ்வித துன்பத்திலும், நரக நெருப்பிலும் அல்லல்பட மாட்டார்கள்" என்றார். நம் பலவீனங்களை அறிந்த அன்னை நம்மை மீட்க, கேடயமாக விளங்கும் உத்திரியத்தை தந்தருளினார். இந்த பரிவுள்ள அன்னையின் அருளைப்பெற்று இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவர் துணையோடு வாழ்ந்திட இத்திருப்பலியில் தொடர்ந்து மன்றாடுவோம், இறையாசீர் பெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவருக்காகவும் வேண்டுகிறோம். அவர்களுக்குத் தேவையான அனைத்து அருளையும் நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று கார்மேல் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, தீராத வியாதிகளாலும், மன உளைச்சலாலும் அவதிப்படுகின்றவர்கள் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களுக்கு நீரே நல்ல மருத்துவராகவும், ஆலோசகராகவும் இருந்து முழுமையான சுகத்தை அளிக்க வேண்டுமென்று கார்மேல் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. உறவின் பாலமே இறைவா, எங்களின் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்ந்து இறையாட்சி எங்கும் மலரச் செய்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கார்மேல் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. ஞானத்தின் இருப்பிடமே இறைவா, கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவிகளையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களுக்கு நல்ல கல்வி ஞானத்தை வழங்கி சமுதாயத்திற்கும் திருஅவைக்கும் ஏற்ற பிள்ளைகளாக இவர்கள் வளர வேண்டுமென்று கார்மேல் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 16ம் ஞாயிறு

திருப்பலி
19.07.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *சாஞா. 12:13, 16-19* II. *உரோ. 8:26-27* *மத்.. 13: 24-43*

"நல்ல விதைகளை விதைப்பவர் மானிடமகன் வயல் இவ்வுலகம், நல்ல விதைகள் கடவுளின் ஆட்சிக்குட்பட்ட மக்கள், களைகள் தீயோனைச் சேர்ந்தவர்கள், அவற்றை விதைக்கும் பகைவன் அலகை, அறுவடை

செய்வோர் வானதூதர்" என்ற இறைவார்த்தையின் அர்த்தத்தை உணர்ந்துக்கொள்ள இறைவன் இன்றைய திருப்பலிக்கு நம்மை அழைத்திருக்கிறார். கோதுமை மணியை மண்ணில் பயிரிடும்போது களைகளும் அதனோடு சேர்ந்து அறுவடை காலம் வரை வளருகிறது. இடையில் களைகளை அறுக்காமல் விட்டுவிட்டால் கோதுமை மணியோடு களைகளும் சேர்ந்து முழுவதும் வீணாகிறது.

இந்த நற்செய்தி மூலம் இயேசு சொல்ல விரும்புகின்ற செய்தி என்னவென்றால் இவ்வுலகில் மன்னிக்க முடியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். மன்னிப்பு என்றால் என்ன என்று தெரியாதவர்களைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. திறந்த உள்ளத்தோடு கடவுளுக்குப் பயந்து வாழக்கூடிய மற்றும் மன்னிப்பதற்கு முயற்சி எடுக்கக்கூடிய மனிதர்களை நாம் மாற்ற முடியும், மன்னிக்க முடியும். ஆனாலும் சில நேரத்தில் மன்னிப்பு கேட்கிறவர்களைக் கூட நாம் மன்னிக்கத் தயாராக இருப்பதில்லை. ஆனால் கடவுள் நாம் எவ்வளவு பெரிய தவறுகள் செய்தாலும் நம்மை மன்னிக்கத் தயாராக இருக்கிறார். இதைக்குறித்து இயேசு நமக்குச் சொல்லும் செய்தி என்பது களைகள் என்று சொல்லும் அலகையின் ஆதிக்கம் அதிகம் உள்ளது. பல வகையில் நம்மை குழப்பத்தில் ஆழ்த்தி, பதப்பட வைக்கும் இதை நாம் உணர்ந்துக் கொண்டாலே நம் எண்ணமும் சிந்தனையும் ஒன்றுபட்டு செயல்பட்டால் சாத்தானின் சோதனைகளை வென்று நம்மை கறையின்றிச் காத்துக்கொள்ளலாம் என்கிறார்.

இறைவன் நமக்குக் கொடுத்துள்ள ஒவ்வொரு நிமிடமும் காலம் தாழ்த்தாமல், அறுவடையின் காலத்தை அறிந்துக்கொண்டு முன்மதியோடு செயல்பட இறைவன் நமக்கு இன்றைய நாளில் தெளிவாக கூறியுள்ளார் என்பதை உணர்ந்து இறைவனின் அருட்கொடைகளைப் பெற்று பண்பட்ட நிலம்போல வாழ்வில் செயல்பட இத்திருப்பலியில் பக்தியோடு பங்குபெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனாம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அனைவரையும் உம்பாம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் நல்ல விதைகளைப்போல எல்லோரையும் அரவணைத்து செல்லக்கூடிய நல்ல ஞானத்தைக் கொடுத்து நல்ல உடல் உள்ள சுகத்தோடு உம்பணிபுரிய அவர்களுக்கு உம் தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாகப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. வழிகாட்டும் தெய்வமே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் அனைவரும் மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு மாறிவரும் இவ்வுலகச் சூழலுக்கேற்ப நல்வழியில் நடத்திடவும், பொருளாதார வளர்ச்சியை அதிகரித்து, மனநிறைவோடும் மகிழ்வோடும் நாளும் வாழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்புத் தந்தையே இறைவா, மாணவ மாணவிகளை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் தங்கள் வாழ்வை அறிவியல் உலகத்தோடு இணைத்துக்கொண்டு தங்களின் வாழ்வை மனம்போன போக்கில் வீணடித்துக்கொண்டு செல்லாமல், தங்களின் வாழ்விற்கேற்ற பாதையை சரியான வழியில் நடத்திச் செல்ல உமது ஞானத்தையும், சிந்தனையையும் அவர்களுக்கு அளித்து பாதுகாத்து வழிநடத்த உம்மை மன்றாடுகிறோம்.

4. நன்மையின் நாயகரே எம் இறைவா, நீர் படைத்த இயற்கை அனைத்தும் நல்லதெனக் கண்டீர். ஆனால் இன்றைய கலாச்சாரத்தில் அவைகள் ஒவ்வொன்றாய் அழிக்கப்பட்டு வரும் அவலத்தைக் காண முடிகிறது. இதனால் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகி துன்பப்படும் உம்மக்களை நீரே உடனிருந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## புனித மகதலா மரியா விழா

திருப்பலி
22.07.2026

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித மதலேன் மரியா அவர்களின் திருவிழாவை கொண்டாடுகின்றோம். புதிய ஏற்பாட்டில் நாம் அதிகம் முக்கியத்துவம் கொடுக்காத ஒரு புனிதை இவர். ஆனால் இவர்தான் இயேசுவோடு மிக நெருக்கமான அன்புறவு கொண்டிருந்தவர் என்பதற்கு நற்செய்தி நூல்கள் பல சான்றுகள் வழங்குகின்றன. குறிப்பாக இயேசுவின் இறப்பின் வேளையில் அவரது ஆண் சீடர்கள் ஓடிவிட, சிலுவையடியில் நின்றுகொண்டிருந்த துணிவுமிக்க பெண்களில் இவரும் ஒருவர். இயேசுவை கல்லறையில் வைத்தபிறகு கூட, விடியற்காலையில் இருள் நீங்கும் முன்பே இயேசுவின் கல்லறைக்கு சென்றார் என்று நாம் விவிலியத்தில் வாசிக்கும்போது வியப்படைகிறோம். ஆம் அன்பில் அச்சமில்லை (1யோவா.4:18), அன்பிற்கு முடிவிராது (1கொரி. 13:10) என்பதுபோல அன்புக்கு இலக்கணமும் அடையாளமுமாக விளங்குபவர் மதலேன் மரியா. இறந்த பின்பும் அன்பு வாழும் என்பதை எண்பித்தவர் மதலேன் மரியா. இயேசுவின் உயிர்ப்புக்கு நமக்கு மதலேன் மரியாவை ஒரு முக்கிய சாட்சியாக நாம் விவிலியத்தில் பார்க்கின்றோம். ஆகவே இப்புனிதரைப் போல ஒருவர் மற்றவரோடு அன்புறவுடன் வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தூய்மையின் திருஉருவே எம் இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின் மூலம் நாங்கள்

அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கிணங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. முழுமையின் நிறைவே எம் இறைவா, அன்று பாலைநிலத்தில் உம் வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு வேண்டிய மட்டும் உணவளித்தீரே, எமது வாழ்விலும் எங்கள் துன்பவேளையில் நாங்கள் வேண்டும் ஆசீர்வாதத்தையும் பலத்தையும் நிறைவாய்த் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இறைவா அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் இன்னும் கோலோச்சுகின்ற அடிமைத்தனங்கள் மறைந்து சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் விடிந்திடவும், அதற்காக நாங்கள் உழைத்திடத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



## புனித பிரிட்ஜித்

திருப்பலி
23.07.2026

### முன்னுரை

*திரு. ச. ஜான் போஸ்கோ*

அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே, இன்றைய இறைவார்த்தைகள் கிறிஸ்துவோடு நெருக்கமான ஒன்றிப்பில் வாழ அழைக்கும் அழைப்பாக அமைந்துள்ளன. முதல் வாசகத்தில் திருத்தூதர் பவுல், தனது கிறிஸ்தவ வாழ்வின் ஆழமான அனுபவத்தைப் பகிர்ந்துகொள்கிறார். "இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" என்ற அவரது வார்த்தைகள், கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொரு சீடரின் வாழ்வின் இலக்காக இருக்க வேண்டும். தன்னலம், அகந்தை, சுய விருப்பங்கள் ஆகியவற்றிற்கு இறந்து, கிறிஸ்துவின் அன்பிற்கும் திருவுளத்திற்கும் முழுமையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்க்கையையே பவுல் வாழ்ந்தார். கிறிஸ்துவின் சிலுவையோடு தன்னை இணைத்துக்கொண்டதால், அவர் இனி தனக்காக அல்ல, கிறிஸ்துவுக்காக வாழ்ந்தார். அவருடைய வாழ்வின் மையமாக கிறிஸ்துவும், அவரது அன்பும், அவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையும் இருந்தன. இன்றைய நற்செய்தியில் இயேசு தம்மை உண்மையான திராட்சைக் கொடியாகவும், தம் சீடர்களை அதன் கிளைகளாகவும் சித்தரிக்கிறார். திராட்சைக் கொடியோடு இணைந்திருக்கும் கிளை மட்டுமே உயிர் பெற்று கனி தர முடியும். அதுபோல, கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் வாழ்க்கை மட்டுமே உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையாகும். இயேசு தெளிவாக, "என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது" என்று கூறுகிறார். இந்த வார்த்தைகள் நம்முடைய பலவீனத்தையும், இறையருளின் அவசியத்தையும் நினைவூட்டுகின்றன.

நாம் பல நேரங்களில் நமது திறமைகள், அறிவு, செல்வம் அல்லது

பதவியின்மீது நம்பிக்கை வைக்கிறோம். ஆனால் உண்மையான ஆன்மீக பலனும் நிலையான மகிழ்ச்சியும் கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் உறவிலிருந்தே வருகிறது. ஜெபம், இறைவார்த்தை தியானம், திருவருட்சாதனங்களில் பங்கேற்பு, அன்பின் செயல்கள் ஆகியவற்றின் வழியாக நாம் கிறிஸ்துவோடு ஒன்றிப்பில் நிலைத்திருக்கும்போது, நமது வாழ்வு பலனுள்ள வாழ்க்கையாக மாறுகிறது. அப்பொழுதுதான் நமது குடும்பங்களிலும், பணியிடங்களிலும், சமுதாயத்திலும் கிறிஸ்துவின் அன்பிற்கும் உண்மைக்கும் சாட்சிகளாக இருக்க முடியும். அன்பானவர்களே, இன்று நமது வாழ்வை சுயபரிசோதனை செய்வோம். கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் என்று பவுலைப் போல நம்மால் கூற முடியுமா? திராட்சைக் கொடியோடு இணைந்த கிளையைப்போல நாம் கிறிஸ்துவோடு இணைந்திருக்கிறோமா? நமது வாழ்வு இறைவனுக்கு மாட்சி அளிக்கும் கனி தரும் வாழ்க்கையாக இருக்கிறதா? என்ற கேள்விகளை நம் உள்ளத்தில் எழுப்புவோம். எனவே, கிறிஸ்துவோடு நெருக்கமான உறவில் நிலைத்திருந்து, அவரது அன்பிலும் வார்த்தையிலும் வளர்ந்து, மிகுந்த கனி தருகின்ற சீடர்களாக வாழவும், நமது வாழ்வின் வழியாக இறைவனுக்கு மாட்சி செலுத்தவும் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பின் ஊற்றே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், மற்றும் உமது பணியினைச் செய்கின்ற ஒவ்வொருவரும், சென்ற இடமெல்லாம் உமது புகழ்ச்சியும், மாட்சியையும் மக்களிடையே செழித்தோங்கி வாழ்வில் உம்மை பிரதிபலிக்கும் நற்கருவிகளாக இவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வின் ஊற்றே எம் இறைவா, வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகள், தோல்விகள் மற்றும் துன்பங்களால் மனம் தளர்ந்திருப்போர் அனைவரும் கிறிஸ்துவோடு மீண்டும் இணைந்து, அவரது அன்பிலும் வல்லமையிலும் புதிய நம்பிக்கையையும் உறுதியையும் பெற்று உம்மில் இணைந்து ஒரே நம்பிக்கையின் மக்களாகவும், நற்செய்தியின்படி வாழ்ந்து அவ்வழியில் தங்களை அர்ப்பணித்து வாழும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுவோம்.

3. அன்பு தந்தையே எம் இறைவா, இன்றைய காலச்சூழலில் வாழும் இளைஞர்களும் குடும்பங்களும் உலக ஆசைகளாலும் மதிப்பீடுகளாலும் இழுத்துச் செல்லப்படாமல், கிறிஸ்துவின் வார்த்தையில் வேரூன்றி, அன்பு, ஒற்றுமை மற்றும் சாட்சிய வாழ்க்கை வாழவும், "இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" என்ற பவுலின் அனுபவத்தை நம் வாழ்விலும் உணர்ந்து, கிறிஸ்துவோடு இணைந்த கிளைகளைப் போல மிகுந்த கனி தருகின்ற உண்மையான சீடர்களாக வளர வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுவோம்.

# புனித ஷார்பல் மாக்லூப்

திருப்பலி
24.07.2026

## முன்னுரை

*திரு. ச. ஜான் போஸ்கோ*

அன்பிற்கினிய இறைச்சமூகமே, இன்றைய முதல் வாசகத்தில், தமது மக்களை ஒருபோதும் கைவிடாத இறைவன், அவர்களை வழிநடத்த தம் இதயத்திற்கேற்ற நல்ல பணியாளர்களை அனுப்புவதாக வாக்களிக்கின்றார். இன்றைய நற்செய்தியில், விதைப்பவர் உவமையின் விளக்கத்தின் வழியாக, இறைவார்த்தை நம் வாழ்வில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை இயேசு தெளிவுபடுத்துகிறார். இறைவார்த்தை அனைவரிடமும் விதைக்கப்படுகிறது; ஆனால் அது பலன் தருகிறதா இல்லையா என்பது அதை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரின் மனப்பக்குவத்தைப் பொறுத்தது. வழியோர உள்ள நிலம்போல அலட்சியமான மனமும், பாறை நிலம்போல ஆழமற்ற நம்பிக்கையும், முட்செடிகள் நிறைந்த நிலம்போல உலகக் கவலைகள் மற்றும் பொருளாசைகளால் நிரம்பிய உள்ளமும் இறைவார்த்தையின் வளர்ச்சிக்குத் தடையாகின்றன.

ஆனால் நல்ல நிலம்போல இறைவார்த்தையை ஏற்று, அதை சிந்தித்து, வாழ்வில் நடைமுறைப் படுத்துகின்றவர்கள் மிகுந்த கனிதருகின்றனர். அன்பானவர்களே, நமது இதயங்கள் நல்ல நிலமாக மாறுவதற்கு தூய ஆவியானவரின் துணையும் அவருடைய அருட்கொடைகளால் நமது மனமும் உள்ளமும் புதுப்பிக்கப்பட வேண்டும். அகந்தை, சுயநலம், உலகப் பற்றுகள் மற்றும் பாவப் பழக்கங்கள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, இறைவனின் குரலுக்குச் செவிசாய்க்கும் திறந்த மனதை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். இறைவார்த்தையை வெறுமனே கேட்பவர்களாக அல்லாமல், அதை வாழ்வாக்குகின்றவர்களாக மாற வேண்டும்.

இவ்வாறு இறைவார்த்தையை கேட்டுப் புரிந்துகொண்டு, அதன்படி வாழும்போது, நாம் நூறு மடங்காகவும், அறுபது மடங்காகவும், முப்பது மடங்காகவும் பலன் தருகின்ற சீடர்களாக வளர்வோம். நமது குடும்பங்களில், பணியிடங்களில், கல்வி நிலையங்களில் மற்றும் நாம் வாழும் சமூகத்தில் கிறிஸ்துவின் அன்பிற்கும் உண்மைக்கும் சாட்சிகளாக இருப்போம். இறைவார்த்தையின் ஒளியில் நம்மை வழிநடத்தும் சான்றோர்களுக்கும் திருஅவையின் பணியாளர்களுக்கும் திறந்த உள்ளத்தோடு செவிமடுத்து, இயேசுவின் வார்த்தைகளை நம் வாழ்வில் செயல்படுத்தி, மிகுந்த கனிதருகின்ற மக்களாகவும் உலகிற்கு ஒளியாகவும் உப்பாகவும் வாழ வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இறையரசின் தூணாய் இருந்து திருஅவையை வழி நடத்துபவரே, தாயின் கருவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள்,

குருக்கள் மற்றும் திருநிலையினர் அனைவரும் இறையரசின் மதிப்பீடுகளை மக்களுக்கு எடுத்துரைத்து தங்களின் வாழ்வின்முலம் தடைகளை உமது அருளினால் உடைத்தெறிந்து நீர் ஒருவரே உயிருள்ள இறைமகன் என்பதை உலகறியச் செய்ய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் தேவனே எம் இறைவா, நாட்டையாளும் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் தன்னலம் கருதாமல், மக்களுக்காக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற சிந்தனையை மனதில் நிறுத்தி, தாங்கள் நீதியுடனும் நேர்மையுடனும் செயல்பட்டு, தங்கள் பொறுப்பை அதிகாரமாக அல்ல, சேவையாகக் கருதும் மனதைப் பெற்று மக்களுக்குச் சேவை செய்யும் பரந்த உள்ளத்தையும், ஆற்றலையும் தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

3. இறைவா, உமது வார்த்தையைக் கேட்கும் அனைவரின் இதயங்களும் நல்ல நிலம்போல் வளமுடையதாக செம்மைப்படுத்தப்படவும், உலகக் கவலைகளாலும் சோதனைகளாலும் தளர்ந்து போகாமல், உம்முடைய வார்த்தையின் வல்லமையோடு செயல்பட்டு, முப்பது, அறுபது, நூறு மடங்கு பலன் தரும் உண்மையான கிறிஸ்தவச் சாட்சிகளாக வாழ வளர அருள்புரிய மன்றாடுகிறோம்.



## புனித யாக்கோபு திருத்தூதர் விழா

திருப்பலி
25.07.2026

### முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

அன்பு இறைமக்களே, இன்று நாம் திருத்தூதர் யாக்கோபின் விழாவைச் சிறப்பிக்கின்றோம். இயேசுவின் பன்னிரெண்டு திருத்தூதர்களில் ஒருவராகவும் செபதேயுவின் மகனுமான யாக்கோபு இயேசுவின் பாடுகள் மற்றும் உயர்ப்பின் முக்கிய நிகழ்வுகளுக்குச் சாட்சியாக இருந்தவர். இன்றைய நற்செய்தியில் இறையாட்சியில் பெருமை என்பது அதிகாரத்திலும், பதவியிலும் இல்லை. மாறாக பனிவான சேவையில்தான் உள்ளது என்பதை இயேசு இன்றைய நற்செய்தியில் போதிக்கிறார். யாக்கோபுவும், யோவானும் உயர்ந்த இடத்தை நாடியபோது இயேசு அவர்களுக்கு தியாகத்தின் பாதையையும், சிலுவையின் பாதையையும் காட்டினார். "உங்களுள் பெரியவனாக விரும்புகிறவன் உங்களுக்குத் தொண்டனாக இருக்க வேண்டும்" என்ற இயேசுவின் வார்த்தைகள் கிறிஸ்தவ வாழ்வின் அழைப்பாகும். புனித யாக்கோபு இந்த அழைப்பை ஏற்று தம் வாழ்வையே நற்செய்திக்காக அர்ப்பணித்து இரத்த சாட்சியாக மரித்தார். கி.பி. 44ம் ஆண்டில் இவரை வாளால் வெட்டிக் கொன்றனர். (திப.12:1-2) இவர் திருஅவையின் முதல் திருத்தூதர் மறைசாட்சியாகப் போற்றப்படுகிறார். இன்றைய திருப்பலியில் திருத்தூதர் யாக்கோபுவிடம் நம்பிக்கையில் உறுதியாகவும், சாட்சிய வாழ்வில்

துணிவுடனும், அன்பிலும், பணிவிலும் வளர நம் ஒவ்வொருவருக்காகவும் இத்திருப்பலியை பக்தியோடு ஒப்புக்கொடுத்து, இறைவனிடம் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்கு பணியாளராக இருக்கட்டும் என்ற ஆண்டவரே, திருஅவை பணியாளர்களை திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்கள், பொதுநிலையினர் புனித யாக்கோபுவைப்போல கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக வாழ்ந்து இறைமக்களை உண்மை, அன்பு, நேர்மை மற்றும் தியாகத்தின் பாதையில் வழிநடத்த இறையருள் பெற ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும் என்ற ஆண்டவரே, உலக நாடுகளின் தலைவர் நீதியுடனும், நேர்மையுடனும் மக்களை ஆட்சி செய்து அமைதி, ஒற்றுமை, மற்றும் மனித மாண்பைப் பாதுகாக்கும் பணியில் தொண்டுபுரிய வரமருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மானிட மகன் தொண்டு ஏற்பதற்கன்று, தொண்டு ஆற்றுவதற்கே வந்தார் என்றவரே, நோயினால் துன்புறுவோரையும், பலவிதமான பிரச்சனைகளால் வேதனையுறுவோரையும் நீர் கண்ணோக்கி, நம்பிக்கையிழந்தோர்க்கு நம்பிக்கையளித்து, தனிமையில் இருப்பவர்களுக்கு தொண்டு செய்யும் வரத்தை அளித்து, உயிர்த்த ஆண்டவரின் ஆறுதலையும், வல்லமையையும் தாங்கி, அவர்களை புதிய நம்பிக்கை வழியில் வழிநடத்திச் செல்லக்கூடிய ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 17வது ஞாயிறு

திருப்பலி
26.07.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

I. *1அர. 3:5, 7-12* II. *உரோ. 8:28-30* *மத்.. 13: 44-52*

இறைஇயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று பொதுக்காலம் ஆண்டின் 17ஆம் ஞாயிறை சிறப்பிக்க இங்கு நாம் ஒன்றுக்கூடியுள்ளோம். புதையலையும், நல்முத்தையும் தேடிக் கண்டுபிடிக்க இறைஇயேசுவின் அழைப்பை ஏற்று நம் ஆலயம் வந்துள்ள இறைமக்களை இனிதே வரவேற்கிறோம். இன்றைய நற்செய்தியில் மூன்று உவமைகளைக் காண்கிறோம். புதையல், முத்து, மீன்கள் நிறைந்த வலை என்ற இம்மூன்று உவமைகளையும் இறையரசுக்கு ஒப்புமைப்படுத்துகிறார் இயேசு. புதையல், முத்து, வலை என்ற மூன்று உருவகங்களும் பல்வேறு சிந்தனைகளை மனதில் எழுப்புகின்றன.

நன்னெறிகளுக்கு எதிராக, உத்தரவின்றி நுழையும் எதிர்மறை எண்ணங்களையும், கருத்துக்களையும், இறையரசு என்ற சிப்பி, அழகிய முத்தாக மாற்றும் வலிமை பெற்றது என்பதை, நாம் முத்து உவமையிலிருந்து கற்றுக் கொள்கிறோம். உள்ளார்ந்த உண்மை மதிப்பை உணர்ந்தால், அதற்காக எதையும் இழக்க நாம் துணிவு கொள்வோம். பெரும்பாலான நேரங்களில் நம்மிடம் புதைந்துள்ள, நம் குடும்பங்களில் புதைந்துள்ள மதிப்புக்களை உணராமல், நாம் வாழ்ந்து வருகிறோம். நம் கண்முன்னே முத்துக்களும், புதையல்களும் அடிக்கடித் தோன்றினாலும், அவற்றைக் காணும் பக்குவம் இல்லாமல், நாம் குழம்பி நிற்கிறோம். இதன் மூலம் நாம் அறிவது, கடவுளின் ஞானம் இறையரசிற்காக இந்தச் செல்வத்தை எப்படி உபயோகிக்க வேண்டும் என்று நமக்கு வழிகாட்டும். எது உண்மையான மதிப்புள்ள பொருள், செயல் என்று நம்மால் கண்டு பிடிக்க முடியும். அதன் மூலம் இறைவன் தரும் புதையலாம் இறையரசைப் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இறையரசு என்னும் புதையலைத் தந்த எம் இறைவா, உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் ஆகிய அனைவரும், நல்லாட்சி செய்யத் தேவையான ஞானத்தைக் கொடுத்து, எம்மை அரிய நல்முத்தாம் இறையரசில் கொண்டு சேர்க்க தேவையான வரங்களைப் பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. அமைதியின் இறைவா, இவ்வுலகில் அமைதி ஆட்சி செய்யவேண்டுமெனில், ஆட்சியில் இருப்போர், அமைதியின் சக்தியை உணரும் அறிவுத்திறன் பெற வேண்டுமென்றும் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமையைப் பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தைத் தந்தருளவும், எங்கள் தலைவர்கள் உண்மையான ஞானம் பெற்றவர்களாக மக்களின் குறைகளை நீக்கி நிறைவுக்காண வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. வானளாவிய இரக்கம் கொண்ட இறைவா, எம் கிறிஸ்துவ வாழ்வு, மிகுதியான செல்வத்தைக் கொண்டுள்ளது, எம்மிடம் ஒன்றுக்கும் உதவாத பொருள்களை அகற்றி விட்டு, விலை மதிப்புள்ள பொருளாகிய இறையரசிற்குத் தயார்ப்படுத்தவும், குடும்பத்தினர் அனைவரும் உண்மையான மதிப்பை அறிந்திடவும் வேண்டிய ஞானத்தையும், இறைப்பற்றையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்புவோருக்கு வாழ்வாகிய எம் இறைவா, பூமியில் நிலவும் மிக உயர்ந்த அழுத்தம், அதிகமான வெப்பநிலை ஆகியவற்றைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு, வைரமாக மாறிடும் நிலக்கரிபோல் எம் இளையோர்கள் இவ்வுலகம் தரும் அழுத்ததாலும், நெருக்கடியாலும் தீட்டப்பட்டு உம் மணிமுடியில் மின்னிடும் வைரமாய்த் திகழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித அல்போன்சா முட்டாத்துப்படத்து கன்னி

**திருப்பலி**
**28.07.2026**

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

இறையேசுவில் பிரியமுள்ள இறைச்சமூகமே, இன்றைய நாளைச் சிறப்பிக்கும் நாம், மத்தேயு நற்செய்தியில் கூறப்பட்டுள்ளபடி நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பானவர்தான் நமது இந்திய நாட்டின் புனிதையான அல்போன்சா அவர்கள். 1910 ஆகஸ்டு 19ம் தேதி ஜோசப் முட்டத்து மற்றும் மரியம்மி ஆகியோரின் அன்பு மகளாக பிறந்தார். பிறந்து சில வாரங்களிலேயே தாய் இறந்துவிட்டதால் பெரியம்மா அன்னம்மாவின் அன்பில் வளர்ந்தார். மேலும் பாட்டியும் தன் பங்கிற்கு பாசத்துடன் புனிதர்களின் வாழ்க்கையை கதைகளாக சொல்லி இறைபக்தியிலும் இறையச்சத்திலும் வளர்த்தார்கள்.

1917 நவம்பர் 27 அன்று முதல் நற்கருணை பெற்று, இயேசுவை உள்ளத்தில் குடிவைத்தார். 1925 ஜனவரி 21ல் உறுதிபூசுதல் பெற்ற பிறகு தமது இருதயத்தை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தார். ஒவ்வொரு சனிக்கிழமையும் அன்னை மரியாளிடம் சிறப்பாக மன்றாடி அவரையே தம் தாயாக ஏற்றுக்கொண்டார். தம் பெரியம்மாவிடம் "நான் உலக சிற்றின்ப வாழ்வை வேண்டாமென்று வெறுக்கின்றேன், என் தேவன் ஒருவரையே என் மணவாளனாக ஏற்றுக்கொள்ள இதயபூர்வமாக தீர்மானித்தேன்" எனக் கூறினார். 1930 மே 19ல் துறவற ஆடைப் பெற்றார். 1933 முதல் அதிகமாக நோய்வாய்ப்பட ஆரம்பித்தார். சில நாட்களுக்குப் பிறகு வாய், மூக்கு வழியாக இரத்தம் கசிந்தது. இறக்கும் நிலையில் துன்புற்றவர் அருளாளர் குரியாக்கோஸ் அல்போன்சாவைத் தொட்டு குணமளித்தார். பூரண குணம்பெற்ற அவர் மீண்டும் கொடிய காய்ச்சலால் 50 நாட்களாக துன்பப்பட்டார். எல்லோரும் தனியாக வைக்கும்படி தலைமையிடம் பரிந்துரைத்தார்கள். அல்போன்சா "நான் இயேசுவின் குழந்தை தெரேசாவிடம் நவநாள் இருக்கிறேன், இன்றிலிருந்து ஒன்பது நாட்களுக்குள் சரியாகாவிட்டால் அப்படியே செய்யுங்கள்" என்றார்.

மீண்டும் மீண்டும் பல நோய்களால் துன்பப்பட்ட அல்போன்சா 1945 ஜூலை 28 அன்று இறந்தார். 1986 பிப்ரவரி 8ம் நாள் அன்று திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலால் அருளாளர் பட்டமும் 2008 அக்டோபர் 12 அன்று திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பர் அவர்களால் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார். இயேசுவின் துன்பத்தில் தன் துன்பதை ஒப்பிடுவோம் இப்புனிதையைப் போல் நிலைவாழ்வை பெறுவார் என்னும் எண்ணத்தை மனதில் கொண்டு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்புத் தந்தையே இறைவா, உமது திருஅவையை வழிநடத்தும் எம்

திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் அனைவரும் அன்பிலும் அமைதியிலும் ஒற்றுமையோடு தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து மகிழ்வுடனும், ஆர்வத்துடனும், தியாக உள்ளத்துடனும் பணிபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. குணமளிக்கும் இறைவா, தீராதநோயினால் அவதியுறுவோர், அமைதியிழந்து தவிப்போர், வறுமையில் வாடுவோர் அனைவரையும் உமது அருளால் நிறைத்து உம்மீது நிலையான விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டு வாழ அருள்புரியும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வும் வழியுமான இறைவா, எம் பங்கு குடும்பங்களில் இறைப்பக்தியும் இறையச்சமும், பிறரன்பும், பிறரைப் புண்படுத்தாத வார்த்தைகளும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், மன்னிப்போம், மறப்போம் என்னும் நற்பண்புகளை ஏற்று வாழ அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## புனிதர்கள் மார்த்தா, மரியா, இலாசர்

திருப்பலி
29.07.2026

**முன்னுரை**

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவின் இனிய சமூகமே, இன்று நம் திருஅவையானது புனிதர்களாக மார்த்தா, மரியா மற்றும் இலாசர் இவர்களின் விழாவைச் சிறப்பிக்கின்றது. இவர்கள் மூவரும் இயேசுவால் குணமாக்கப்பட்ட தொழுநோயாளி சீமோனின் பிள்ளைகள் என்று விவிலியம் கூறுகிறது. இவர்கள் எருசலேமிற்கு இரு மைல்கள் தூரத்திலிருந்த பெத்தானியாவை சேர்ந்தவர்கள். இயேசு எருசலேம் வரும்பொழுதெல்லாம் பெத்தானியாவிலுள்ள இவர்களது இல்லத்திற்கு செல்வது வழக்கம்.

ஒரு சமயம் இயேசு பெத்தானியாவிற்கு சில நாட்கள் வராமலிருந்தபோது இலாசருக்கு உடல் நலமின்றி இறந்து போனார். கல்லறைக்குள் வைத்து நான்கு நாட்கள் ஆகிவிட்டது. அந்நேரம் இயேசு மார்த்தாவின் இல்லத்திற்கு வந்தார். மரியாள் அழுதுகொண்டே அவர் பாதத்தில் அமர்ந்து நீங்கள் முன்பே வந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டானே என்று கூறினாள். இயேசுவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. கல்லறைக்கு செல்வோம் என்று கூறியபோது உடல் வைக்கப்பட்டு நான்கு நாட்களாயிற்றே நாற்றம் அடிக்குமே என்று மார்த்தாள் கூற, இயேசுவும் கல்லறைக்குச் சென்று "இலாசர் உயிர்பெற்று வந்தான். இதைக்கண்ட அந்நகரத்து யூத மக்கள் இயேசுவின் அரும்பெரும் செயலைக் கண்டு மனம்மாறி இயேசுவிடம் வந்தார்கள். பின் ஒரு சமயம் தொழுநோயாளி, சீமோன் இல்லத்தில் ஒரு விருந்துக்கு இயேசு வந்திருந்தார். அப்போதும் மரியா இயேசுவின் பாதத்தில் அமர்ந்து தன்னிடமிருந்த நறுமணத் தைலத்தை இயேசுவின் தலையில் ஊற்றி பூசிவிட்டார். இதைக்கண்ட சிலர் இவ்வளவு விலையுயர்ந்த தைலத்தை வீணடிக்கிறாரே இதை விற்று ஏழைகளுக்கு பயன்படுத்தலாம் அல்லவா என்று

பேசிக்கொண்டனர். இதையறிந்த இயேசு "அவர் செய்தது முறையான செயல்தான். ஏழைகளுக்கு விரும்பும்போதெல்லாம் கொடுக்கலாம். நான் எப்போதும் உங்களுடன் இருக்கப் போவதில்லை என் அடக்கத்திற்காக முன்னதாகவே என் உடலுக்கு தைலம் பூசிவிட்டார். உலகம் முழுவதும் எங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இவர் செய்ததும் எடுத்துக் கூறப்படும். இவரும் நினைவு கூறப்படுவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்று கூறினார்.

இதன் மூலம் உடன்பிறப்புக்களான மார்த்தா, மரியா, இலாசர் மூவரும் இயேசுவின் அன்பை பெற்றவர்கள் என அறிந்து மரியாள் தன் பங்கை அறிந்து செய்ததுபோல நாமும் இயேசுவின் அன்பை பெற்று அவரது மாட்சிமைக்கு தலைவணங்கி வாழ இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பின் வானகத் தந்தையே இறைவா, திருஅவையின் வழித்தோன்றல்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் மரியா தன் பங்கைத் தேர்ந்துக்கொண்டதுபோல இயேசுவின் இறைவார்த்தையை தங்கள் இலட்சியமாக ஏற்றுப் பணிபுரிய இவர்களுக்குத் தேவையான அனைத்து ஆற்றல்களையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தீயவை விலக்கி நன்மை பயக்கும் இறைவா, இக்காலச் சூழலில் எங்களுக்கு ஏற்படுகின்ற இயற்கை பேரிடர்கள், காலச்சூழல்கள், நோய்நொடிகள், தீவிரவாத செயல்கள் இவற்றினால் பாதிக்கப்பட்டு வாழ வழியின்றி தவிப்போரை உம் கருணையினால் ஆசீர்வதித்து நல்வாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, நாங்கள் வாழும் வாழ்க்கை உமக்கெதிரானதாக இருந்தால் அவற்றிலிருந்து நாங்கள் விடுபட்டு, உம் பாதச்சுவட்டில் தடம் பதித்து வாழும் வழியை எங்களுக்கு காண்பித்து அவற்றில் நடக்கத் தேவையான அனைத்து ஆற்றல்களையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# லொயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார்

திருப்பலி
31.07.2026

## முன்னுரை

*திரு. ஜான் சுரேஷ்*

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று நம் தாய் திருஅவை புனித லொயோலா இஞ்ஞாசியார் விழாவினைக் கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இஞ்ஞாசியார் 26வயது வரை பெர்டினாண்ட் இஸபெல்லாவினது

அரசவையில் போர் வீரராகப் பணியாற்றினார். ஒருமுறை போரில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக தனிமைக்கு தள்ளப்பட்டார். தனிமையில் இருந்த இஞ்ஞாசியாருக்கு உதவியாக சில புத்தகங்களை நண்பர்கள் வாசிக்க கொடுத்தார்கள். புத்தகங்களை வாசிக்க தொடங்கிய இஞ்ஞாசியாருக்கு தனிமை தொலைந்தது, மனக்கலக்கம் தொடங்கியது.

எருசலேம் சென்று அன்னை மரியாவுக்கு வணக்கம் செலுத்தி, ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கு கொண்டு தம் போர்க்கருவிகளை பீடத்தில் வைத்து, தியானம் செய்தார். இவ்வாறு அவர் "ஆன்மீகப் பயிற்சிகள்" என்னும் நூலை தியானம் செய்யும் அனைவருக்காகவும் எழுதினார். பத்து பேருடன் சேர்ந்து 1534 ஆகஸ்ட் 15 அன்று புதிய துறவு அமைப்பை இஞ்ஞாசியார் உருவாக்கினார். இவ்வாறு இயேசு சபை உலகிற்குள் உதயமானது. இப்பேர்ப்பட்ட புனிதரின் நினைவு திருப்பலியில் கலந்துக்கொண்டு ஆழ்ந்த நம்பிக்கையும், கடவுள் பக்தியும் வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உம்மை எமக்காக கையளித்த இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் நீர் பகர்ந்த சான்றிக்கேற்ப அர்ப்பண வாழ்வில் உறுதியோடு வாழத் தேவையான அருளைப்பொழிய வேண்டுமென்று புனித இஞ்ஞாசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, மாணவ மாணவியருக்காக மன்றாடுகிறோம். அவர்கள் அறிவு வளம் பெற்று விளங்கவும், எதிர்கால வாழ்விற்கு தேவையானதை ஆய்ந்தறிந்து தேர்வினை சிறப்பாக எழுதத் தேவையான அருளைப்பொழிய வேண்டுமென்று புனித இஞ்ஞாசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வு தரும் உணவு நானே என்றுரைத்த இறைவா, விவசாய மக்களுக்காக மன்றாடுகிறோம். போதிய மழையையும் நல்ல விளைச்சலையும் விளைச்சலுக்கேற்ற ஊதியமும் கிடைக்கப்பெற உமதருளைப் பொழிய வேண்டுமென்று புனித இஞ்ஞாசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. நிலைவாழ்வை பொழியும் வள்ளலே எம் இறைவா, உம்மால் வாழ்வளிக்கப்பட்ட நாங்கள் அனைவரும் நீர் ஒருவரே எங்கள் தஞ்சம் என்பதை உணர்ந்து உம்மோடு இணைந்திருப்பதே எங்கள் வாழ்வின் இலக்காகக் கொண்டு உம்முடைய வழிகாட்டுதலின்படி வாழ்ந்து உம்மீது நம்பிக்கையில் நிலைத்து நிற்க வரமருள புனித இஞ்ஞாசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

பகுதி-2

# நம்பிக்கையில் வளர...




# சென்னை சலேசிய மாநிலமும் புனித தோமையாரும்

*திரு. ஜான் அலெக்ஸ்*

ஜூலை மாதம் சென்னை சலேசிய மாநிலத்திற்கு இன்னொரு சிறப்புமிக்க மாதமாகும். ஆம் இம்மாதம் 3ம் தேதி அதன் பாதுகாவலரான தூய தோமாவின் பெருவிழாவினை மகிழ்ச்சியோடும் நன்றியோடும் சிறப்பிக்கும் மாதமாகும். இந்நேரத்தில் நம் நாட்டிற்கு கடவுளின் நற்செய்தியை கொண்டுவந்த தூய தோமாவைப் பற்றி சில முக்கியமான தகவல்களை தெரிந்து கொள்வதும் அந்த நற்செய்தியின் விழுமியங்களை நமது வாழ்வால் பிறருக்கு எடுத்துக்காட்டவும், குறிப்பாக இளையோருக்கு கொண்டு சேர்ப்பதும் நமது கடமையாகும்.

நம் பாதுகாவலர் - தூய தோமா : இந்திய சலேசிய மாநிலம் தூய தோமாவை பாதுகாவலராக கொண்டு 1926ம் ஆண்டு அதிகாரப்பூர்மாக தோற்றுவிக்கப்பட்டது. அது மேலும் வளர்ச்சிப் பெற்று 1934ல் வடக்கு மற்றும் தெற்கு சலேசிய மாநிலங்களாக தனித்தனியே பிரிக்கப்பட்டு சென்னை ஏற்கனவே தோமாவின் மாநகராக இருந்த காரணத்தினால் தென்னிந்திய சலேசிய மாநிலத்திற்கு தூய தோமாவை பாதுகாவலராக கொண்டு செயல்படலாயினர். அவருடைய உடலின் திருப்பண்டங்கள் இன்று சென்னை சாந்தோமிலுள்ள அவரின் கல்லறையில் வைக்கப்பட்டுள்ளது நாம் அறிந்ததே.

இதே சென்னையில்தான் தூய தோமா அவர்கள் தன்னுடைய இறுதி நாட்களை கழித்தார், பணியாற்றினார், மனமாற்றத்தை ஏற்படுத்தினார் மற்றும் அவர் போதித்தவைகளுக்கு சாட்சியாக தன்னுடைய இரத்தத்தை சிந்தினார். சென்னை சலேசிய மாநிலத்திற்கு தூய தோமா பாதுகாவலராக கிடைத்தது மாபெரும் தனிச்சிறப்பாகும். இயேசுவின் சீடர்களில் இல்லாத ஒரு சிறப்பு இவருக்கு உண்டென்றால் அது இயேசுவின் நற்செய்தியோடும், நற்செய்திக்காகவும், அவர் பண்டைய ரோமானிய பேரரசின் எல்லைப்புறங்களை துணிச்சலோடும் சவாலோடும் கடந்தது. விவிலியத்தில் அவரது பெயர் மத்தேயு (10:3), மாற்கு (3:18), லூக்கா (6) மற்றும் தி.பணி(1:13)ல் காணப்பட்டாலும், யோவான் நற்செய்தியில் மட்டும்தான் தூய தோமாவின் தனிப்பட்ட சிறப்பான பணி மற்றும் அவரது குணாதிசயங்களை நம்மால் காணமுடியும்.

**தூய தோமா - மறைமுகத் தன்மையின் அமைதி :** இவரது பிறப்பையோ, இளமைப் பருவத்தையோ குறித்து விவிலியத்தில் எந்த தகவல்களையும் காண முடிவதில்லை. மாறாக திருத்தூதர்களின் முதல் எழுவரின் பெயர்களும் தங்கள் அழைப்பிற்கு முன்பே குறிப்பிடப்பட்டிருப்பினும் தூய தோமாவின் பெயர்தான் முதலில் குறிப்பிடப்படுவது திருத்தூதர்களின் பெயர் பட்டியலில் தான்.

**அடைமொழிகள் இல்லாத தூய தோமா :** திருத்தூதர்களில் அடைமொழி இல்லாமல் குறிப்பிடப்படுபவர் தூய தோமா. உதாரணத்திற்கு : பேதுரு தலைமையில் முதல்வர் எனவும், யோவான் அன்பில் முதல்வர் எனவும், சொல்லப்பட்டுள்ளது. ஏன் யூதா இஸ்காரியோத்திற்கு கூட நிதியமைச்சர் என்ற பட்டம் சூட்டப்படுகிறது. ஆனால் "திதிம்" என்ற சொல்லால் இவரை குறிப்பிடுகிறார்கள். அதாவது திதிம் என்றால் "இரட்டையர்" என்று பொருள். விவிலியத்தில் இந்த இரட்டையர் யார் என்றும் குறிப்பிடப்படவில்லை. அதுமட்டுமல்ல தூய தோமாவின் நற்செய்தி நூல் கூட திருஅவையால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு நற்செய்தி நூல் என்பது குறிப்பிடத்தக்கது. பதவி, பட்டம், அடைமொழி இவைகளை விரும்பித் தேடும் இன்றைய உலகில், நம் பாதுகாவலரின் மறைமுகத் தன்மை நம் குறுகிய அடையாளங்களைத் தாண்டி பயணிக்க நம்மை அழைக்கின்றது.


**சாட்சிய வாழ்வின் சின்னம் - தூய தோமா :** யாக்கோபும் யோவானும் இயேசுவின் அரியணையின் இடது, வலது பக்க இடங்களுக்கு ஆசைப்பட்டனர். பேதுரு கூட தனது சீடத்துவத் தியாகத்திற்கு பதிலாக என்ன கிடைக்கும் என்று இயேசுவிடம் கேட்டார் ஆனால் தூய தோமா எதையும் எதிர்பார்க்காதவராக இருந்தவர். இயேசுவிற்கு தன் உயிரை வழங்க கூட தயங்காத தியாகத்தன்மை தோமாவில் வெளிப்படுகிறதை நாம் பார்க்கலாம்.

**மறைப்பணியில் - தூய தோமா :** கேரளத்திற்கும் தமிழகத்திற்கு வருகைத் தந்ததையும் கிபி 52ல் 7 ஆலயங்களைக் கட்டி எழுப்பி, சென்னையில் மறைச்சாட்சியாக உயிர்த்தியாகம் செய்து சாந்தோமில் அடக்கம் செய்யப்பட்டிருப்பதையும் பல நம்பிக்கைக்குரிய மரபுகளிலும், வரலாற்று

சாட்சியங்களிலும் புலப்பட்டாலும், அவரின் மறைப்பணியின் முக்கிய விவரங்கள் வரலாற்றின் திரைக்கு பின் மறைந்திருக்கின்றன என்பதே உண்மை. பேதுருவும் பவுலும் யாக்கோபும் ஆற்றிய மறைப்பணிக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவமும் சிறப்பும் தூய தோமாவின் மறைப்பணிக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் வரலாற்றின் மௌனத்தில் அவரது பிள்ளைகளாகிய நாம் அவரது மறைப்பணியை நம் வாழ்வில் எண்பித்துக் காட்டவேண்டும்.

**உலகிற்கு உப்பாக - தூய தோமா :** உலகிற்கு உப்பாக மாற அழைக்கப்படும் நாம் தூய தோமாவின் முன்மாதிரிகையை பின்பற்றி வாழ முற்படுவோம். நம் அன்றாட குடும்ப மற்று பங்கு வாழ்வின் மறைமுகத்தன்மையில் நற்செய்தியின் சாட்சிய மக்களாக வாழ்வோம்.

**இறுதியாக :** "நான் நம்புகிறேன். என் நம்பிக்கையின்மை நீங்க உதவும்" (மாற்கு 9:24) என்று இயேசுவிடம் கூறிய பெயர்தெரியாத ஆனால் மறக்க முடியாத அந்த விவிலிய கதாபாத்திரத்தை போல இறைவனில் நாம் கொண்டுள்ள அனுபவத்தை உறுதிப்படுத்திக் கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம்.





# அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ்

## வாழ்வு தரும் பாடம்

*திருமதி. டிலைலா சேவியர்*

இப்புனிதை 1902ல் ஜனவரி 12ம் நாளில் கிரேனடா நிக்காராகிபை என்னும் ஊரில் உயர்குடியில் எட்டு குழந்தைகளில் ஒருவராகப் பிறந்தவர். இவருக்கு சிறு வயதிலிருந்தே தன்னுடைய பெற்றோர்கள், உறவினர்கள் வழியாக முறையான கல்வி வழங்கப்பட்டது. இவரிடமிருந்த கலை ஆர்வம், திறமையை உணர்ந்த பெற்றோர்கள் வர்ணம் தீட்டுதல், வரைதல், பியானோ, வைலின் போன்ற இசைக்கருவிகளை மீட்டும் பயிற்சியையும் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் வழியாக பயிற்றுவித்தனர். மேலும் இவருடைய பெயர் சலேசிய கன்னியர்களின் கல்வி நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டிருந்தது. 1924ம் ஆண்டில் தனது 12வயதில் தனக்கு ஏற்பட்டிருந்த மிகவும் மோசமான வாதக்காய்ச்சல் பக்கவாதம் சகாய அன்னையினால் தான் குணமடைந்தது என்பதை உணர்ந்தார். இந்நிகழ்ச்சியே இவர் ஓர் சலேசிய கன்னியர் ஆவதற்கு அடித்தளமாக இருந்தது.

வாதக்காய்ச்சலினாலும், பக்கவாதத்தாலும் மரியா ஆறு மாதக்காலமாக தான் பள்ளிக்கு செல்லும் வாய்ப்பை இழந்திருந்தார். இருப்பினும் உடல்நிலை சரியில்லாமல் துன்பப்பட்டுக்கொண்டிருந்த காலங்களில் தன்னைத்தானே ஆழ்ந்த நம்பிக்கை, நற்பண்புகள், மனஉறுதி போன்றவைகளை

தன்னுடையதாக உருவாக்கிக் கொண்டாள். மரியா தனக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும், துன்பங்களையும் "கடவுளின் பரிசு" என்று கூறிக்கொண்டாள். மரியாளின் மருத்துவர் "மரியாவின் இதயம் மிகவும் மோசமான நிலையில் பழுதாகியுள்ளது என்று கூறியும், அவள் அதைப்பற்றி எந்த கருத்தும் தெரிவிக்காமல் தான் எப்படியாவது கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் செபத்தால் குணமாவேன் என்ற ஆழ்ந்த நம்பிக்கையை பெற்றிருந்தாள்".

தன்னை காணவந்த தோழியிடம் "தான் புனித தேவதாயின் உதவியால் குணமடைவேன், அன்னை தன்னை கண்டிப்பாக குணப்படுத்துவாள்" என்று கூறினாள். சிறிது நாட்களுக்குப் பின், மரியா தன்னை பள்ளிக்கு சென்றபோது அவளிடம் நோய் இருந்த எந்த அறிகுறியும் இல்லாமல் முழுமையாக குணமடைந்தது அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. 1985ல் டிசம்பர் 8ம் நாளன்று, "மரியாளின் புதல்விகள்" என்ற இயக்கத்தின் அங்கத்தினராக சேர்ந்தார். இது மரியா சகாய அன்னைமீது தான் வைத்திருந்த ஆழ்ந்த பக்தியை காட்டியது. மரியாவின் ஆன்மீக குரு எமிலியோ போட்டாரி மரியாவின் தேவ அழைத்தலுக்கு மிகவும் உதவினார். மரியா 1920ல் தன்னுடைய 18வது வயதில் சகாய அன்னையின் புதல்வியர் இல்லத்தில் சேர்ந்துக்கொண்டார். தனது ஆன்மீக குருவின் வார்த்தைகளான "எப்படிப்பட்ட துன்ப நேரமானாலும், தான் சுக்கு நூறாக உடையும் நிலை ஏற்பட்டாலும் உன்னுடைய அழைத்தலில் உறுதியாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டும்" என்ற தாரக மந்திரத்தை மரியா தன்னுடைய இறுதிநாள்வரை துறவற வாழ்வில் நிலைத்திருக்க உதவியது.

1929ல் ஜனவரி 6ம் நாள் மரியா தன்னுடைய இறுதி நித்திய வார்த்தைப்பாட்டினை புதுப்பித்தாள். மரியா ஒவ்வொரு நாளும் இறைவனின் கையில் தன்னை ஒரு கருவியாக நினைத்து மகிழ்ச்சியோடு வாழ திட்டமிட்டார். புனித ஜான்போஸ்கோவின் முன்மாதிரியான ஆன்மீக வாழ்க்கை குறிப்புகள் மரியாவுக்கு உதவியாக இருந்தது.

1931ல் மரியா சான் ஜோஸ் என்னும் இடத்திற்கு அனுப்பப்பட்டாள். 1933ல் அங்கே இசை, வர்ணம் தீட்டுதல், தட்டெழுத்து போன்றவைகளை செய்தார், குழந்தைகளைப் பயிற்றுவித்தாள். மரியா இளம் பிள்ளைகளின் உள்ளத்தை கவர்ந்ததனால், அவர்களுடைய ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார். அதுமட்டுமல்லாமல் நற்செய்தியை எடுத்துரைப்பதிலும், மறைக்கல்வி சொல்லித் தருவதிலும், வாழ்க்கை இழந்தவர்கள், புறக்கணிக்கப்பட்டோர்க்கு உதவுதல் போன்ற பணிகளை செய்யத் துவங்கினார். மேலும் வசதி உள்ளவர்கள் வசதி இல்லாதவர்களுக்கு உதவும் நல்ல மனப்பான்மையை தன்னுடைய சொல்லாற்றலினாள் உருவாக்கினாள். 1945ல் ஏழைக் குழந்தைகளுக்கான பள்ளியை துவங்கினாள். 1953ல் இறைவனின் உதவியால் மருத்துவமனை ஆரம்பிக்க நல்ல மருத்துவர்களின் மருத்துவ உதவியும், பண உதவியும் கிடைத்தது. கிராமங்களில் சரியான இல்ல வசதி

இல்லாதவர்களுக்கு நல்ல வீடுகளை அமைத்துக் கொடுத்தார். பின் சிறிய நிலத்தை வாங்கி அதில் இல்லங்களை அமைத்து அதனருகே துறவற சபை வேதியர்கள், வாழ்க்கைக் கல்வி பயில்வோர், தங்குவதற்கு இல்லங்கள் அமைத்து கொடுத்தார்.

ஆங் சேன்ரோ சான் ஜோஸ்லில் மரியன்னைக்காக கட்டப்பட்ட தேவாலயம் இருந்தது. மரியா எப்பொழுதும் அந்த தேவாலயத்திற்கு சென்று, திவ்விய நற்கருணை பக்தி வழியாகவும், மரியன்னைமீது தனக்குள்ள பக்தியையும், அன்பையும், தன்னுடைய சமூக பணிக்காக செபிப்பதிலும் ஈடுபட்டாள். மரியாவிடம் சமூக பணிக்கு குறைவான பணவசதி இருந்தாலும், இறைவனும், தேவ அன்னையும் தனக்கு எப்போதும் உதவுவார்கள் என்ற நம்பிக்கைக் கொண்டிருந்தாள். தன்னுடைய வயதான காலங்களில் மற்ற எல்லா பணிகளிலிருந்து ஓய்வுப் பெற்றாலும், இளையோருக்கும், முதியோருக்கும் மறைக்கல்வி கற்றுத் தருவதில் ஓய்வு பெறவில்லை.

1977 ஜூலை 7ம் நாள் ஓய்வு பெற அனுப்பப்பட்ட லியோன் நிக்காராகோவில் மரியா இறைவனடி சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 75. மரியாவின் உடல் சேன் ஜோஸ் கோஸ்டா ரிக்காவிற்கு சலேசியன் சிற்றாலயத்திற்கு அனுப்பப்பட்டு அவ்வாலயத்தில் புதைக்கப்பட்டார். இப்புனிதை தன்னுடைய வாழ்நாளெல்லாம் புனித சகாய அன்னையின் துணையோடு ஏழை எளிய மாணவிகளுக்கும், புறந்தள்ளப்பட்ட மக்கள், நோயாளிகள், வயதானவர்கள் என்று பலருக்கும் பல விதங்களில் பணியாற்றி நல்ல சமூகப்பணி திருத்தூதர் என்ற பெயரோடு மரித்தார்.





# புனித லொயோலா இஞ்ஞாசியார்

## வாழ்வு தரும் பாடம்

*திரு. லூயிஸ் சகாயராஜ்*

கத்தோலிக்க திருச்சபையின் திருத்தூதுப் பணியில் சிறப்பாக இடம் பெற்றவர்களுள் ஒருவர் புனித இஞ்ஞாசியார் இன்றைய ஸ்பெயின் நாட்டில் உள்ள லொயோலா கோட்டையில் 29.10.1491ல் 13வது பிள்ளையாக பிறந்தவர் இக்னேஷியஸ் என்ற இனிகோ. இவர் பிறந்து சிறிது காலத்திலேயே இவரது தயார் இறந்துவிட மரிய தெ காரின் ஏனம் பெண்மணியால் வளர்க்கப்பட்டார். இனிகோ இளம் வயதிலேயே இராணுவத்தில் சேர்ந்து பணிபுரிய ஆர்வம் கொண்டிருந்தார். அதற்கான பயிற்சிகளை மேற்கொண்டார். 18வது வயதில் ஆயுதம் ஏந்தி போரில் ஈடுபட்டனர். 26வயது வரை அவர் போர் வீரராக, அரசி பெர்டினனட் இஸபெல்லாவின் அரசவையில் சிறப்பாகப் பணிபுரிந்தார். அவரது மிடுக்கான தோற்றமும், ஆடம்பர வாழ்வும், அகங்காரத் தொனியும் தனித்தன்மை மிக்கவராகக் காட்டியது. எப்போதும் வெற்றியை மட்டுமே கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தவர் எதிரிகளையும் எதிர்ப்பவரையும் கொல்லத் தயங்காதவராக இருந்தார்.

1521ல் பம்பசெனா கோட்டையை மீட்க பிரெஞ்சு படையினரோடு போரில் ஈடுபட்டிருந்தபோது அவரது காலில் ஏற்பட்ட காயத்தால் மிகவும் பாதிக்கப்பட்டார். நீண்ட நாள் சிகிச்சை பெற வேண்டியிருந்தது. இந்த மருத்துவ காலத்தில் தனிமையில் இருந்த இஞ்ஞாசியாருக்கு படிக்க சில புத்தகங்களை கொடுத்தார்கள். புனித பிரான்சிஸ் அசிசி, புனித சாமிநாதர்

ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப்படித்தார். ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை வரலாறும், புனிதர்களின் தியாகம் நிறைந்த வாழ்க்கை முறைகளும் வாசிக்க வாசிக்க அவரது மனதை வருடின. குறிப்பாக கர்த்தூசியன் துறவி லூடோல்ப் எழுதிய "கிறிஸ்துவின் வரலாறு" என்ற புத்தகம் இஞ்ஞாசியாரின் மனதைத் தின்றது என்றே சொல்லலாம். உடல் காயத்துக்கு மருத்துவம் பலனளிக்கும் மனக்காயத்துக்கோ ஆண்டவரே ஆற்றுவிக்கும் அருமருந்து என்ற உண்மை அவரை ஆட்கொண்டது. இனித கிறிஸ்துவின் போர் வீரராக வாழ்ந்து சாட்சியம் பகர வேண்டுமென்ற உந்துதல் தோன்ற தன்னுடைய ஆடம்பர அகங்கார வாழ்க்கையைத் துறக்க முடிவெடுத்தார். அன்னை மரியா பாலன் இயேசுவேடு காட்சி தந்து இஞ்ஞாசியாரின் உந்துதலை உறுதிப்படுத்தினார். மொன்செராத் என்ற இடத்தில் உள்ள ஆலயத்தில் எருசலேம் செல்லும் வழியில் மரியன்னைக்கு வணக்கம் செலுத்தி ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்கெடுத்து மனதை பாரமின்றி லகுவாக்கினார். போர் வீரருக்குரிய உடைகளை பீடத்தில் வைத்துவிட்டு இரவு முழுவதும் செபித்தார். பார்சிலோனா செல்லும் வழியில் மன்ரசோக் குகையில் தங்கி தியானம் செய்தார். அப்போது அவர் எழுதிய "ஆன்மீகப் பயிற்சிகள்" என்ற நூல் இன்றளவும் மனப்பக்குவ தியானத்திற்குரிய வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது. தான் விரும்பியவாறே புண்ணிய பூமிக்கு பயணம் மேற்கொண்டார். தனது 32வது வயதில் இறையியல் பட்டம் பெற பாரீஸ் நகரில் படித்தார். அப்போது புனித பிரான்சிஸ் சவேரியார், புனித பீட்டர் பேபர் ஆகியோரை சந்தித்து நட்பு வட்டத்தை உருவாக்கினார். 1534ல் ஆகஸ்ட் 15அன்று லொயோலாவில் உள்ள மோன்ட்மார்ட்டர் புனித பேதுரு ஆலயத்தில் பிரான்சிஸ் சேவியர், அல்போன்சா சல்மேரன், டியாகோ லயனஸ் நிக்கோலாஸ் போபாடில்லா, பீட்டர் பேபர், சிமாயோ ரோடரிக்ஸ் ஆகிய ஆறுபேறுடன் இணைந்து துறவு பணிபுரிய முடிவெடுத்தார். 43வது வயதில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

1539ல் இயேசு சபையை நிறுவினார். திருத்தந்தை மூன்றாம் பவுல் இயேசு சபைக்கு அங்கீகாரத்தை 1540ல் வழங்கினார். இஞ்ஞாசியாரின் பயிற்சிகள், அணுகுமுறைகள், தியான ஒழுங்குகள் ஆகியவை மிகவும் விமர்சனத்துக்குள்ளாயின. இதனால் பல்வேறு போராட்டங்களை சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால் அவரது தளராத வாதங்களால் போராட்டங்களை, எதிர்ப்புகளை வென்றார். இஞ்ஞாசியார் நிறுவிய இயேசு சபை திருத்தந்தையின் வலது கரமாக செயல்பட்டது மறைப்பரப்பு பணியில் தன்னிகரில்லா இடத்தைப் பிடித்தது இயேசு சபையில் பயிற்சி பெற்ற துறவிகள் போதிப்பதில் மட்டுமல்ல, சமூக மேம்பாட்டிலும் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினர். இன்றளவும், புனித இஞ்ஞாசியாரின் நெறியில் இயேசுவின் இறையரசுக் கனவை நனவாக்கும் பணியில் மிகப் பெரிய புரட்சியை இயேசு சபை செய்து வருகின்றது. சமத்துவம், சகோதரத்துவம், இறைபராமரிப்பு ஆகியவற்றை அனைத்து தரப்பு மக்களும் புரிந்துக்கொள்ளக் கூடிய வகையில் கல்விப்பணி, ஆன்மீகப் பயிற்சிகள், எழுத்துப்பணி குருத்துவ-துறவறப் பணிகள், மறைப்பரப்புப் பணி என பல்வேறு நிலைகளில் இயேசு சபை பணியாற்றி இயேசுவின் அன்பை மக்கள் உணரச் செய்து வருகின்றது.

1556, ஜூலை 31 அன்று இறந்த இஞ்ஞாசியாருக்கு திருத்தந்தை 5ம் பவுல் 1609ம் ஆண்டு ஜூலை 27 அன்று அருளாளராகவும் 1962, மார்ச் 12 அன்று திருத்தந்தை 15ம் கிரகோரி புனிதராகவும் பட்டம் வழங்கப்பட்டது. நற்கருணை, திருச்சிலுவை ஆகியவற்றின்மீது அசையா பற்றுக்கொண்டிருந்த புனித இஞ்ஞாசியாரை பின்பற்றும் இயேசு சபையாரும் அதை தொடர்கின்றனர். புனித இஞ்ஞாசியார், சான் செபஸ்டின் மற்றும் பில்பாவோ மறைமாவட்டங்களுக்கும், பிஸ்கே. கிபுஸ்கோவா, பாஸ்கோ நாடுகளுக்கும் பிலிப்பைன்ஸ் நாட்டு இராணுவத்துக்கும் இயேசு சபைக்கும், போர்வீரர்களுக்கும், பேராசியர்களுக்கும் பாதுகாவலராகப் போற்றப்படுகிறார். "ஆன்மீகப் பயிற்சிகள்" என்ற புனித இஞ்ஞாசியாரின் மனநல தியானங்கள், செபங்கள் நிறைந்த புத்தகம் 1548ல் வெளியானது முதல் இன்றும் மிகச்சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறது.

னது போதனையாலும் முன்மாதிரியாலும் இயேசு சபையை சிறந்த ஆன்மீக அமைப்பாக மாற்றியதால்தான் புனித இஞ்ஞாசியாரைப் பின்பற்றி புனித பிரான்சிஸ் சவேரியார் புனித பீட்டர் பேபர் மேலும் பல புனிதர்களை உருவாக்கி இயேசு சபை தன்னிகரில்லா அமைப்பாக திகழ்கிறது. கடுந்தவ முயற்சிகளால் உருவாக்கப்படும் இயேசு சபையின் துறவிகள் தங்கள் பணிகளால் திருச்சபைக்கும், சமூகத்திற்கும் மகிவும் சீரிய முறையில் தங்களது தியாகம் நிறைந்த பங்களிப்பை தந்து வருகின்றனர். அவர்களின் முயற்சிகள் வெற்றி பெறவும், பணிகள் சிறக்கவும், சமுத்துவப் பாதையில் சமூகம் சங்கமிக்கவும் நாமும் செபிப்போம். வாழ்த்துவோம்.





# திருஅவைச் செய்திகள்

*திரு. ஜான் அலெக்ஸ்*

## காசாவில் நம்பிக்கையையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தும் எருசலேம்

திருஅவைத் தலைவர்கள்ஜூன் 22, திங்களன்று, எருசலேமின் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் முதுபெரும் தந்தை மூன்றாம் தியோபிலஸ் மற்றும் எருசலேமின் இலத்தீன் வழிபாட்டு முறையின் முதுபெரும் தந்தை பியர்பத்திஸ்தா பித்சபாலா ஆகியோர், போரின் பேரழிவுகரமான விளைவுகளால் துன்பப்படும் மக்களுக்கு ஆன்மீக ஆதரவையும் ஒற்றுமையையும் வழங்க காசாவிற்கு ஒரு மேய்ப்புப்பணி பயணத்தை மேற்கொண்டனர்."இந்தப் பயணம் கிறிஸ்தவ சமூகம் மற்றும் காசாவில் வசிப்பவர்கள் தொடர்ந்து கடுமையான மனிதாபிமான துன்பங்கள், பயம், இழப்பு மற்றும் நிச்சயமற்ற தன்மையை அனுபவித்து வரும் சூழலில் அவர்கள் மீதான திருஅவையின் மேய்ப்புப்பணி பொறுப்பை பிரதிபலிக்கிறது" என்று எருசலேமின் இலத்தீன் வழிபாட்டு முறை முதுபெரும் தந்தை தெரிவித்துள்ளார். செபம், நெருக்கமான உடனிருப்பு மற்றும் மேய்ப்புப் பணியின் வழியாக, தற்போதைய மனிதாபிமான நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல், இரக்கம் மற்றும் புதிய நம்பிக்கையை வழங்க திருஅவைத் தலைவர்கள் முயற்சித்து வருகின்றனர்.தங்கள் பயணத்தின் போது, அவர்கள் அருள்பணியாளர்கள், துறவற சமூகங்கள்,

கிறிஸ்தவக் குடும்பங்கள் மற்றும் மோதலால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து வருகின்றனர். இந்தப் பணி நலவாழ்வு, மனிதாபிமான உதவி மற்றும் மனித மாண்பைப் பாதுகாப்பதில் திருஅவைகளின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.திருக்குடும்பப் பங்கில் திரண்டிருந்த பங்கு மக்களும் உள்ளூர் மக்களும் இரு திருஅவைத் தலைவர்களையும் ஆரவாரத்துடன் வரவேற்றனர். காசாவின் நிலைமை இன்னும் சவாலாக இருந்தபோதிலும், அப்பகுதி திருஅவையின் கவனத்தின் மையமாகவே உள்ளது என்று கர்தினால் பித்சபாலா குறிப்பிட்டார்.

## பேராயர் ஃபுல்டன் ஷீனின் அருளாளர் பட்டமளிப்பை முன்னிட்டு உலக மறைப்பணி செபமாலை முயற்சி

அமெரிக்காவில் உள்ள திருத்தந்தை மறைத்தூதுக் கழகம், பேராயர் ஃபுல்டன் ஜே. ஷீன் அவர்களின் அருளாளர் பட்டமளிப்பு நிகழ்வுக்குத் தயாராகும் வகையில், நாடு முழுவதும் உள்ள கத்தோலிக்கர்களை உலக மறைப்பணி செபமாலையைச் செபிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளது. நற்செய்தி அறிவிப்புப்பணி பேராயத்தின் தலைவர் கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே அவர்கள் தலைமை தாங்கும் அருளாளர் அறிவிப்புத் திருப்பலி இந்த ஆண்டு செப்டம்பர் 24 அன்று மிசோரியின் புனித லூயிஸில் கொண்டாடப்படும். இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், நாடு முழுவதும் உள்ள துறவற சபைகள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளும் திருப்பயணிகளுக்காக 75,000 மறைப்பணி செபமாலைகளைத் தயாரித்து வருகின்றனர். 1951 ஆம் ஆண்டு பேராயர் ஷீன் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட உலக மறைப்பணி செபமாலை, ஐந்து கண்டங்களைக் குறிக்கும் ஐந்து வண்ணங்கள் மூலம் திருஅவையின் உலகளாவிய பணியைச் சித்தரிக்கிறது: பச்சை (ஆப்பிரிக்கா), நீலம் (ஓசியானியா), வெள்ளை (ஐரோப்பா), சிவப்பு (அமெரிக்கா) மற்றும் மஞ்சள் (ஆசியா). 20 ஆம் நூற்றாண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க அமெரிக்க கத்தோலிக்க தலைவர்களில் ஒருவரான பேராயர் ஷீன் அவர்கள், 2012 இல் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களால் வணக்கத்திற்குரியவராக அறிவிக்கப்பட்டார். மேலும் 2019 இல் அவரது பரிந்துரையால் நிகழ்ந்த அதிசயத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அங்கீகரித்தைத் தொடர்ந்து பேராயர் ஷீன் அவர்கள் அருளாளராக அறிவிக்கப்பட உள்ளார்.

## திருத்தந்தையின் AI மடல்: அறநெறி வழிகாட்டியாக ஏற்கும் இந்திய ஆயர்கள்

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் முதல் திருத்தூது மடலான மாண்புமிகு மனிதநேயம் (Magnifica humanitas) என்ற மடலை மனமகிழ்வுடன் வரவேற்றுள்ள இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை (CBCI), ”செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கான ஒரு முக்கியமான அறநெறி வழிகாட்டியாக இந்த மடல் அமையும்” என்று

விவரித்துள்ளது.இந்தத் திருத்தூது மடல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை வெளியிட்ட அறிக்கையில், இந்தியா எதிர்கொள்ளும் வேலைவாய்ப்பின்மை, ஏற்றத்தாழ்வு, கடுமையான கண்காணிப்பு மற்றும் அதிகாரக் குவிப்பு உள்ளிட்ட முக்கிய கவலைகளை இந்திய கத்தோலிக்க ஆயர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் ”செயற்கை நுண்ணறிவு கட்டுப்படுத்தப்படாமல் விடப்பட்டால், இந்தப் பிரச்சினைகள் தீவிரமடையக்கூடும்” என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் ஒழுங்குபடுத்தவும், வேலை வாய்ப்புகள், மனித மாண்பு மற்றும் பொதுநலத்தைப் பாதுகாக்கவும் விடுக்கப்பட்ட அழைப்பிற்காக, இந்தத் திருத்தூது மடல் இந்தியாவில் குறிப்பிடத்தக்க ஊடக கவனத்தைப் பெற்றுள்ளதாகவும் ஆயர் பேரவை குறிப்பிட்டுள்ளது.

## போரால் பாதிக்கப்படும் குழந்தைகளைப் பாதுகாக்க உலக நாடுகளுக்கு திருப்பீடம் அழைப்பு

நியூயார்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவையின் ”குழந்தைகளும் ஆயுத மோதல்களும்” குறித்த விவாதக் கூட்டத்தில், போரால் பாதிக்கப்படும் குழந்தைகள் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை உலக நாடுகள் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று திருப்பீடத்தின் ஐ.நா. நிரந்தரக் கண்காணிப்பாளர் குழு வலியுறுத்தியது.ஆயுத மோதல்களால் பாதிக்கப்படும் குழந்தைகளின் உயிர், மாண்பு மற்றும் எதிர்காலத்தைப் பாதுகாப்பது உலக நாடுகளின் தவிர்க்க முடியாத பொறுப்பு எனக் குறிப்பிட்ட திருப்பீடம், அவர்களின் துயரத்திற்கு உலகம் அளிக்கும் பதிலே, அனைத்துலக சட்டத்திற்கும், இறைவன் அளித்த மனித மாண்பிற்கும் வழங்கப்படும் மதிப்பை வெளிப்படுத்துகிறது என்றும் எடுத்துக்காட்டியது.போரில் செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆளில்லா தொழில்நுட்பங்களின் அதிகரித்து வரும் பயன்பாடு குறித்தும் கவலை தெரிவித்த திருப்பீடம், திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் ”மகத்தான மானுடம்” என்ற திருத்தூது மடலை மேற்கோள்காட்டி, தொழில்நுட்பம் முடிவெடுப்பதில் உதவக்கூடும் ஆனால் மனிதரின் அறநெறித் தீர்மானம், பொறுப்பு மற்றும் கணக்குப்பொறுப்புக்கு ஒருபோதும் மாற்றாக அமைய முடியாது என்று வலியுறுத்தியது.மோதல்களில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டத்தை முழுமையாகக் கடைப்பிடித்து, குழந்தைகளுக்கான சிறப்புப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை வலுப்படுத்த வேண்டும் என்றும் திருப்பீடம் உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது.இறுதியாக, மக்கள் வாழும் பகுதிகளில் வெடிகுண்டு ஆயுதங்களின் மனிதாபிமான விளைவுகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான 2022ஆம் ஆண்டின் அரசியல் பிரகடனத்தை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டது.

சிந்திக்க ஒரு பக்கம்

## வாழ்ந்து காட்டுங்கள்

*திரு. ச. ஜான்போஸ்கோ.*

"நீங்கள் என்னைப் போதகர் என்கிறீர்கள்"
ஆனால் என் வார்த்தைகளைக் கேட்பதில்லை.
"நீங்கள் என்னை ஒளி என்கிறீர்கள்"
ஆனால் என்னைக் காண்பதில்லை.
"நீங்கள் என்னை உண்மை என்கிறீர்கள்"
ஆனால் என்னை நம்புவதில்லை.
"என்னை வழி என்கிறீர்கள்"
ஆனால் வழியில் நடப்பதில்லை.

"நீங்கள் என்னை ஞானம் என்கிறீர்கள்"
ஆனால் என்னை அறியவில்லை.
"நீங்கள் என்னை அழகானவர் என்கிறீர்கள்"
ஆனால் என்னை அன்பு செய்வதில்லை.
"நீங்கள் என்னை நிறைவுள்ளவர் என்கிறீர்கள்"
ஆனால் என்னிடம் கேட்பதில்லை.
"நீங்கள் என்னை முடிவில்லாதவர் என்கிறீர்கள்"
ஆனால் என்னைத் தேடுவதில்லை.

"நீங்கள் என்னைத் தேற்றுபவர் என்கிறீர்கள்"
ஆனால் என்னிடம் பேசுவதில்லை.
"நீங்கள் என்னை உன்னதமானவர் என்கிறீர்கள்"
ஆனால் நான் செய்து காட்டிய பணியைச் செய்வதில்லை.
"நீங்கள் என்னை நீதிமான் என்கிறீர்கள்"
ஆனால் எனக்கு அஞ்சுவதில்லை.
"நீங்கள் என்னை அன்பு செய்வதாகச் சொல்லுகிறீர்கள்"
ஆனால் என்னை விரும்புவதில்லை.
"நீங்கள் என்னை ஆற்றல்மிக்கவர் என்கிறீர்கள்"
ஆனால் என்னையன்றி உங்களால் தனித்து
செயல்பட முடியும் என்று செயல்படுகிறீர்கள்.

"நீங்கள் என்னை கடவுளின் திருமகன் என்கிறீர்கள்"
ஆனால் உங்கள் இதயத்தில் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை.
"நீங்கள் என்னைப்பற்றி சொல்வது அனைத்தும் உண்மையானால்"
என்னை ஏன் பின்பற்றுவதில்லை?
"என்னைத் தவிர உங்களுக்கு வேறு என்ன வேண்டும்?"
நீங்கள் சொல்வதைப்போல வாழ்ந்து காட்டுவீர்களா!?.

# சுடர் வாசகர் போட்டி 135

## சரியான விடைகள்

1. அன்னை மரியாள், புனிதர்கள் மற்றும் வானதூதர்கள்
2. எரேமியாவுடன்
3. புனித பர்னபா
4. அன்பின் ஆலயம் ஆகும்.
5. 742 ஏப்ரல் 21ம் நாள்
6. இத்தாலியில் "ரவென்னா" என்னும் இடத்தில் பிறந்ததால்
7. இட்லரின் ஆட்சியில், தேசதுரோகிகளாக குற்றம் சாட்டப்பட்டு வேதசாட்சிகளாக உயிர் துறந்தனர்.
8. "மரியன்னையின் மாசற்ற இதய பக்தியை என் இதய பக்திக்கு இணையாக வைக்க நான் விரும்புகிறேன்"
9. ஜூன் மாதம் 23ந்தேதி
10. கி.பி.64ல் நீரோ மன்னன், சிலுவையில் தலைகீழாக அறையுண்டு
11. இயேசுவின் வருகையை
12. உரோமை திருஅவையின் முதல் மறைசாட்சியர்
13. கன்னி மரியாவின் மகிழ்ச்சி பாடல்
14. நல்ல சமாரியன்
15. இறைபற்றிலும் நம்பிக்கையிலும் சலேசிய ஆன்மீக உணர்விலும் வாழ்ந்தவர்கள் என்பதால்



### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mr.A Martin, Trichy
R. Flora Mary Josephine,Tirupur
C. Pauline Soosainathan, Chengalpet

# சுடர்

## வாசகர் போட்டி 136



1. "என் ஆண்டவரே என் கடவுளே" - யார் யாரிடம் கூறியது?
2. வரவிருக்கும் இறைமகனைப்பற்றி செக்கரியா இறைவாக்கினர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?
3. "சகாய அன்னையின் கோட்டை" என்ற பெயரில் வீட்டுவசதித் திட்டங்களை செயல்படுத்தியவர் யார்?
4. திருத்தந்தை 12ம் பத்திநாதர் யாருக்கு ஐரோப்பாவின் தந்தை என்ற பட்டம் சூட்டினார்?
5. புனித ஹென்றியை உரோமையின் பேரரசராக முடிசூட்டியவர் யார்?
6. புனித தாமஸ் அக்குவினாசை நண்பராக ஏற்று கல்வி பயின்றவர் யார்?
7. நம்மை மீட்க, கேடயமாக விளங்கும் உத்திரியத்தை தந்தவர் யார்?
8. இயேசுவின் உயிர்ப்புக்கு முக்கிய சாட்சியாக நாம் விவிலியத்தில் பார்க்கின்ற புனிதையின் பெயர் என்ன?
9. புனித யாக்கோபு எந்த ஆண்டு கொல்லப்பட்டார்?
10. இயேசு இறையரசுக்கு ஒப்புமைப்படுத்திய 3 உவமைகள் யாவை?
11. புனித அல்போன்சா எந்த ஆண்டு புனிதையாக உயர்த்தப்பட்டார்?
12. சீமோனின் பிள்ளைகள் என்று விவிலியம் கூறும் நபர்கள்?
13. இயேசு உயிர்த்தப்பிறகு தனது சீடர்களுக்குச் சொன்ன முதல் வாழ்த்து?
14. "ஆன்மீகப் பயிற்சிகள்" என்ற நூலின் ஆசிரியர் யார்?
15. மரிய ரொமேரோ மெனேஸஸின் உடல் எங்கு அடக்கம் செய்யப்பட்டது?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிக்காட்டி

புனித அல்போன்ஸ் மரிய லிகோரி
பொதுக்காலத்தின் 18ம் ஞாயிறு
புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு (பனிமய அன்னை)
ஆண்டவரின் தோற்றமாற்றம் விழா
புனித தோமினிக்
பொதுக்காலத்தின் 19ம் ஞாயிறு
புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா
(இந்தியாவின் பாதுகாவலி மற்றும் சுதந்திர நாள்)
பொதுக்காலத்தின் 20ம் ஞாயிறு
புனித பெர்னார்டு
புனித பத்தாம் பயஸ்
அரசியான புனித கன்னி மரியா
பொதுக்காலத்தின் 21ம் ஞாயிறு
புனித பர்த்தலமேயு திருத்தூதர் விழா
புனித மரிய ட்ரொங்காத்தி
அருளாளர் செப்ரீனோ நமுங்கரா
புனித மோனிக்கா
புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள்
பொதுக்காலத்தின் 22ம் ஞாயிறு

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

மரியாவின் விண்ணேற்பும் - விடுதலையும்
அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா - வாழ்வு தரும் பாடம்
புனித மோனிக்கா தந்த புனித அகுஸ்தினார்
திருஅவையின் செய்திகள்

# ஜூலை மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | பு | | ஆமோ. 5: 14-15, 21-24 | மத். 8: 28-34 |
| 02 | வி | | ஆமோ. 7: 10-17 | மத். 9: 1-8 |
| 03 | வெ | புனித தோமா: இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா | எபே. 2: 19-22 | யோவா. 20: 24-29 |
| 04 | ச | போர்த்துக்கல் நாட்டு புனித எலிசபெத் | ஆமோ. 9: 11-15 | மத். 9: 14-17 |
| **05** | **ஞா** | **பொதுக்காலத்தின் 14ம் ஞாயிறு** | **I. செக். 9: 9-10**<br>**II. உரோ. 8: 9,11-13** | **மத். 11: 25-30** |
| 06 | தி | புனித மரிய கொரற்றி | ஓசே. 2: 14-16, 19-20 | மத். 9: 18-26 |
| 07 | செ | | ஓசே. 8: 4-7, 11-13 | மத். 9: 32-38 |
| 08 | பு | | ஓசே. 10: 1-3.7-8,12 | மத். 10: 7-15 |
| 09 | வி | புனித அகுஸ்தின் சவோரோங் | ஓசே. 11: 1-4, 8-9 | மத். 10: 7-15 |
| 10 | வெ | | ஓசே. 14: 1-9 | மத். 10: 16-23 |
| 11 | ச | புனித பெனடிக்ட் | எசா. 6: 1-8 | மத். 10: 24-33 |
| **12** | **ஞா** | **பொதுக்காலத்தின் 15ம் ஞாயிறு** | **I. எசா. 55: 10-11**<br>**II. உரோ. 8: 18-23** | **மத். 13:1-23** |
| 13 | தி | புனித ஹென்றி | எசா. 1: 11-17 | மத். 10: 34-11:1 |
| 14 | செ | | எசா. 7: 1-9 | மத். 11: 20-24 |
| 15 | பு | புனித பொனவெந்தூர் | எசா. 10: 5-7, 13-16 | மத். 11: 25-27 |
| 16 | வி | கார்மேல் மலை புனித கன்னி மரியா | எசா. 26: 7-9,12,16-19 | மத். 11: 28-30 |
| 17 | வெ | | எசா. 38: 1-6, 21-22.7-8 | மத். 12: 1-8 |
| 18 | ச | | மீக். 2: 1-5 | மத். 12: 14-21 |
| **19** | **ஞா** | **பொதுக்காலத்தின் 16ம் ஞாயிறு** | **I. சாஞா. 12: 13,16-19**<br>**II. உரோ. 8: 26-27** | **மத். 13: 24-43** |
| 20 | தி | புனித அப்போலினாரிஸ் | மீக். 6: 1-4, 6-8 | மாற்கு 12: 46-50 |
| 21 | செ | பிரிந்திசி நகர்ப் புனித லாரன்ஸ் | மீக். 7: 14-15, 18-20 | மத். 12: 1, 11-18 |
| 22 | பு | புனித மகதலா மரியா விழா | இபா. 3: 1-4 | யோவா. 20: 1, 11-18 |
| 23 | வி | புனித பிரிட்ஜித் | எரே. 2: 1-3, 7-8, 12-13 | மத். 13: 10-17 |
| 24 | வெ | புனித ஷார்பல் மாக்லுப் | எரே. 3: 14-17 | மத். 13: 18-28 |
| 25 | ச | புனித யாக்கோபு திருத்தூதர் விழா | 2கொரி. 4: 7-15 | மத். 20: 20-28 |
| 26 | ஞா | **பொதுக்காலத்தின் 17ம் ஞாயிறு** | **I. அர. 3: 5, 7-12**<br>**II. உரோ. 8: 28-30** | **மத். 13: 44-52** |
| 27 | தி | | எரே. 13: 1-11 | மத். 13: 31-35 |
| 28 | செ | புனித அல்போன்சா முட்டாத்துப்படத்து கன்னி | எரே. 14:17-22 | மத். 13: 36-43 |
| 29 | பு | புனிதர்கள் மார்த்தா, மரியா லாசர் | எரே. 15: 10.16-21 | மத். 13: 44-46 |
| 30 | வி | புனித பீட்டர் கிறிசோலோகுஸ் | எரே. 18: 1-6 | மத். 13: 47-53 |
| 31 | வெ | லெயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார் | எரே. 26: 1-9 | மத். 13: 54-58 |

# வாசகர்கள் கவனத்திற்கு




மாதந்தோறும் அச்சிடப்பட்டு உங்கள் கைகளில்
தவழ்ந்த தீபகச் சுடர் மாத இதழ்
தவிர்க்க முடியாத பொருளாதார காரணங்களால்
இணையதளத்தில் இ-புத்தகமாக மட்டுமே
வெளியிடப்பட்டு வருகிறது.
எனவே இந்த மாத இதழ் வழி இறைப்பணிக்கு
நீங்கள் ஏதாவது விதத்தில் நன்கொடை
அளிக்க விரும்பினால் தயவு செய்து QR Code
ஸ்கேன் செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தீபகம்** - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமிய கல்வி மையம்

நடத்தும்

ஞாயிறு மறைக்கல்வி
ஆசிரியர்களுக்கான

# ஒருநாள்
# பயிலரங்கம்

நாள் : ஜூலை 26, 2026 (ஞாயிறு)
(காலை 9 மணிமுதல் மாலை 4 வரை)
இடம் : தீபக வளாகம்,
கீழ்ப்பாக்கம்.

அனைவரும் வருக! பலன் பெருக!!



TO SHARE THE LIGHT

# தீபகம்

தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமிய கல்வி மையம்
வழங்கும்




சிறார்களின்
**திருவிருந்துக்கான**
திருமறைச்சுவடி

**இப்போது விற்பனையில்**

சிறார்களின்
**உறுதிப்பூசுதலுக்கான**
திருமறைச்சுவடி



# DEEPAGAM
proudly presents...




## Certificate of EXCELLENCE



**2 DAYS Session**



## PACE
Professional Approach to Christian Education

Training Teachers to engage in holistic process of Christian Education

**Session 1:** 21 July 2026, Time : 9am to 4pm

## PAVE
Professional Approach to Value Education

Training Teachers for an effective and systematic approach in imparting moral values in children

**Session 1:** 22 July 2026, Time : 9am to 4pm

VENUE : DEEPAGAM - Don Bosco Centre for Faith and Value Education
No.45, Landon's Road, Kilpauk, Chennai-600010

+91 9385201453 deepagamdonbosco

தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **ஈசாக், மரிய சந்தோஷ், மரிய ஜேம்ஸ்**